குடிபெயர்ந்த ஊழியர்களுக்கான ஒரு

# வழிகாட்டிக் கையேடு



MINISTRY OF MANPOWER

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| சிங்கப்பூருக்கு வருக | 01 |
| சிங்கப்பூரில் வசித்தல் | 02 |
| சிங்கப்பூரில் இருக்கும்போது வெளியில் சென்று வருதல் | 06 |
| சிங்கப்பூரில் வேலை செய்தல் | 08 |
| வேலை நியமன உரிமைகள் | 12 |
| வேலை நியமனச் சட்டங்கள் | 20 |
| முதலாளியின் கடமைகள் | 24 |
| வேலைவாய்ப்பு மோசடிகள் | 27 |
| பாதுகாப்பு | 27 |
| மருத்துவ சிகிச்சை நாடுதல் | 30 |
| சிங்கப்பூரின் சட்டங்கள் | 34 |
| பண விவகாரங்கள் | 38 |
| பயனுள்ள தொலைபேசி எண்கள் | 42 |
| கொவிட்-19 தகவல் | 44 |




இந்த எளிமையான வழிகாட்டிக் கையேட்டில் உள்ள தகவல்கள் அச்சிடும் நேரத்தில் துல்லியமானவைக மேலும் தகவலுக்கு, www.mom.gov.sg என்ற இணையத்தளத்தைப் பார்வையிடவும்.

# சிங்கப்பூருக்கு வருக

சிங்கப்பூருக்கு உங்களை வரவேற்கிறோம்! இந்த வழிகாட்டி, உங்களது புதிய வேலையையும் வாழ்க்கைச் சூழலையும் நீங்கள் பழக்கப்படுத்திக் கொள்ள உதவும் தகவல்களை உங்களுக்கு வழங்குகிறது. உங்களது வேலை நியமன உரிமைகளையும் பொறுப்புகளையும் நீங்கள் அறிந்துகொள்வதும், சிங்கப்பூரின் சட்டங்களைப் பின்பற்றி நடப்பதும் மிகவும் முக்கியம். முக்கியமானதாகும்.

வேலை தொடர்பான ஏதேனும் பிரச்சனைகளை நீங்கள் சந்தித்தால், பின்வரும் இடங்களில் உடனடியாக உதவி நாடவும்:

**MINISTRY OF MANPOWER (MOM)**

**TEL: 6438 5122**

Ministry of Manpower
Services Centre
1500 Bendemeer Road
Singapore 339946

உதவிக்காக உங்கள் தங்கும் விடுதியில் உள்ள ஃபாஸ்ட் குழு அதிகாரிகளையும் நீங்கள் அணுகலாம்.

**MIGRANT WORKERS' CENTRE (MWC)**

**TEL: 6536 2692**

579 Serangoon Road
Singapore 218193


51 Soon Lee Road
Singapore 628088



உங்களது சிங்கப்பூர் கைத்தொலைபேசி எண்ணை மனிதவள அமைச்சிடம் தெரிவிக்க கீழே உள்ள இணையத்தள இணைப்பை அல்லது QR குறியீட்டைப் பயன்படுத்தவும். இதன்வழி, நீங்கள் சிங்கப்பூரில் தங்கியிருக்கும் காலகட்டத்தில், வேலை தொடர்பான விவகாரங்களைப் பற்றி மனிதவள அமைச்சு உங்களிடம் தெரிவிக்க இயலும்.

உங்கள் கைத்தொலைபேசி எண்ணை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்: www.mom.gov.sg/update_contact_details.

# சிங்கப்பூரில் வசித்தல்



### சிங்கப்பூர் பற்றிய தகவல்கள்

சிங்கப்பூர் பல இன, பல கலாசார மக்கள் ஒன்றாக வாழும் ஒரு நாடு. இந்நாட்டு மக்கள் பல்வேறு இனங்களையும், மதங்களையும், மொழிகளையும் சேர்ந்தவர்கள். ஒருவருக்கொருவர் வேறுபாடுகளைப் புரிந்துகொண்டு, ஒருவரையொருவர் மதித்து, ஒன்றிணைந்து நல்லிணக்கத்துடன் வாழ்வதும் செயல்படுவதும் அவசியம்.

### சிங்கப்பூரில் உள்ள பல மதங்கள்

புத்த மதம், கிறிஸ்தவ மதம், இஸ்லாமிய மதம், இந்து மதம், தௌவிசம் போன்ற பல மதங்களைச் சேர்ந்த மக்கள் சிங்கப்பூரில் உள்ளனர்.  மற்றவர்களின் மதம் சார்ந்த பழக்கவழக்கங்களை மதித்து நடக்கும் வரை, ஒவ்வொருவரும் தங்கள் மதத்தைச் சுதந்திரமாகப் பின்பற்றி நடக்கலாம். கோயில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் போன்ற அங்கீகரிக்கப்பட்ட வழிபாட்டுத் தலங்களில் நீங்கள் வழிபாடு செய்யலாம்.

### உள்ளூர் சமூக வழக்கங்கள்

சிங்கப்பூரில் இருக்கும்பொழுது, இங்கு பின்பற்றப்படும் உள்ளூர் சமூக வழக்கங்களை நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும். உங்கள் சொந்த நாட்டில் ஏற்றுக்கொள்ளப்படும் வழக்கங்கள் சிங்கப்பூரில் ஏற்றுக்கொள்ளப்படாமல் இருக்கலாம்.

## உங்களுக்கு வழிகாட்ட சில குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன:

### பொது இடங்களில் பின்பற்றவேண்டிய நன்னடத்தைகள்

- சண்டை போடாதீர்கள்
- பேருந்து நிறுத்தங்கள், கட்டடக் கீழ்த்தளங்கள், பொது இடங்களில் உள்ள இருக்கைகள், பூங்காக்கள் அல்லது மேம்பாலங்கள் போன்ற பொது இடங்களில் தூங்காதீர்கள்.
- இரவில் அடுத்தவர்கள் அமைதிக்கு இடையூறாகச் சத்தமாகப் பேசவோ, சத்தமாக இசையை இசைக்கவோ கூடாது.
- குடியிருப்புக் கட்டடங்களின் கீழ்த்தளங்களில் பெரிய கும்பலாகச் சேர்ந்து மதுபானங்கள் அருந்தாதீர்கள்.
- எச்சில் துப்பவோ அல்லது குப்பை போடவோ கூடாது.
- பொது இடங்களில் மேலாடையின்றிச் செல்லாதீர்கள்.

### தனிநபர் சுகாதாரம்

உங்களுக்கு நோய் வருவதையும், தொற்றுநோய் பரவுவதையும் குறைக்க, உங்களைச் சுத்தமாக வைத்திருப்பதும் ஆரோக்கியத்தை மேம்படுத்திக் கொள்வதும் மிகவும் அவசியம்.

- நன்றாகக் குளித்து, உங்கள் தலைமுடியை நன்கு கழுவி சுத்தமாக வைத்துக்கொள்ளவும்.
- பற்களை நன்கு துலக்கவும்
- உங்கள் துணிகளை நன்கு துவைத்து வைத்துக்கொள்ளவும்
- கைகளை சவர்க்காரம் பயன்படுத்தி அடிக்கடி கழுவவேண்டும்

## கை கழுவும்போது பின்பற்றவேண்டிய 8 படிகள்




உங்கள் உள்ளங்கைகளைக் கழுவவும்




ஒவ்வொரு விரலையும் விரல்களுக்கு இடையிலும் நன்கு தேய்க்கவும்




கைகளின் பின்புறம் மற்றும் விரல்களுக்கு இடையில் தேய்க்கவும்




கட்டைவிரலின் அடிப்பகுதியைத் தேய்க்கவும்




விரல்களின் பின்புறம்




உள்ளங்கைகளில் உங்கள் நகங்களால் தேய்க்கவும்




உங்கள் மணிக்கட்டைக் கழுவவும்




சுத்தமான துண்டு அல்லது திசுத் தாள் கொண்டு கைகளை உலர்த்தவும்

## சுகாதார நிலையைக் கண்காணித்தல்


உங்கள் உடல்நிலையைக் கண்காணிக்க, இலவசக் கைபேசிச் செயலி **FWMOMCare-**ஐப் பதிவிறக்கம் செய்யவும். உடல்நலம் இல்லாமல் இருப்பவர்கள் சரியான நேரத்தில் 24/7 தொலை மருத்துவ ஆலோசனை பெறவும் இது உதவுகிறது.

Download on the App Store


GET IT ON Google Play

உங்கள் தங்கும் விடுதியின் அறையில் உள்ள விரைவுத் தகவல் குறியீட்டை வருடுவதற்கு, 'Safe@Home' வசதியை உபயோகித்து, தினமும் வேலைக்குக் கிளம்பும்போதும், திரும்பி வந்தவுடனும் உங்களின் இருப்பிடத்தைத் தெரிவிக்கவும். உங்களின் கைத்தொலைபேசி எண் சரியாக உள்ளதா என்பதை 'My Profile'-ல் சரிபார்த்துக்கொள்ளவும்.


## தண்ணீரைச் சேமியுங்கள்




பல் துலக்கும்போது குழாயைத் திறந்துவைத்து தண்ணீரை வீணாக்காமல், ஒரு குவளையை உபயோகப்படுத்துங்கள்.



துணி துவைக்கும்போதும் பாத்திரங்களைக் கழுவும்போதும் தண்ணீர்க் குழாயைத் திறந்து வைக்காதீர்கள்; ஒரு வாளியில் தண்ணீர் நிரப்பிப் பயன்படுத்துங்கள்.




தண்ணீரை வீணாக்காதீர்கள்.



குளிக்கும் நேரம் முழுவதும் தண்ணீரைத் திறந்து வைத்துக்கொண்டு வீணாக்காதீர்கள்; 5 நிமிடங்களுக்குள் குளித்து முடித்துவிடுங்கள்.



பயன்படுத்தாதபொழுது, தண்ணீர்க் குழாய்களை அடைத்து வைக்கவும். தண்ணீர்க் கசிவுகள் ஏதேனும் இருந்தால் புகாரளிக்கவும்.



தண்ணீர்க் குழாயின் எந்தப் பாகங்களையும் சேதப்படுத்தவோ மாற்றவோ கூடாது.

## உங்கள் ஓய்வு நாளில் எங்கு சென்று வரலாம்

உங்கள் ஓய்வு நேரத்தில் நீங்கள் பொழுதுபோக்கு மையங்களுக்குச் செல்லலாம். அங்கு உங்களுக்காக பல்வேறு வசதிகள் மற்றும் நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.



## பொழுதுபோக்கு மையங்கள்

சிங்கப்பூரில் எட்டு பொழுதுபோக்கு மையங்கள் உள்ளன. அவை பூப்பந்து/கூடைப்பந்து திடல்கள், காற்பந்து மற்றும் கிரிக்கெட் விளையாடும் மைதானங்கள் போன்ற இலவச விளையாட்டு வசதிகளை வழங்குகின்றன. நீங்கள் அங்கு செல்லும்போது, உங்கள் ஊரில் இருக்கும் உறவினர்களுக்குப் பணம் அனுப்பலாம், முடிதிருத்தம் செய்யலாம், பல்பொருள் அங்காடியில் மளிகைப் பொருட்கள் வாங்கலாம் அல்லது அங்கேயே சாப்பிடலாம்.





பொழுதுபோக்கு மையங்களின் விவரங்கள் பின்வருமாறு:

| பொழுதுபோக்கு மையம் | முகவரி |
|---|---|
| Cochrane RC | 100 Sembawang Drive, Singapore 756998 |
| Kaki Bukit RC | 7 Kaki Bukit Avenue 3, Singapore 415814 |
| Kranji RC | 11 Kranji Road, Singapore 737673 |
| Penjuru RC | 27 Penjuru Walk, Singapore 608538 |
| Soon Lee RC | 51 Soon Lee Road, Singapore 628088 |
| Terusan RC | 1 Jln Papan, Singapore 619392 |
| Tuas South RC | 10 Tuas South Street 13, Singapore 636937 |
| Woodlands RC | 200 Woodlands Industrial Park E7, Singapore 757177 |

### சிங்கப்பூரின் மதுபானச் சட்டங்கள்

நீங்கள் மது அருந்துபவராக இருந்தால், நீங்கள் எங்கு, எந்த நேரத்தில் குடிக்கலாம், எங்கு மது வாங்கலாம் என்பதை நிர்வகிக்கும் மதுபானச் சட்டங்களை அறிந்திருக்க வேண்டும்.

கேலாங் மற்றும் லிட்டில் இந்தியா போன்ற மதுபானக் கட்டுப்பாட்டு வட்டாரங்கள் வெவ்வேறு கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளன. கேலாங் மற்றும் லிட்டில் இந்தியாவில் உள்ள காப்பிக் கடைகள் போன்ற உரிமம் பெற்ற கடைகளின் உள்ளே மட்டுமே நீங்கள் மதுபானம் வாங்கி அருந்தலாம். இந்தக் கடைகளுக்கு வெளியே மதுபானம் அருந்துவது சட்டத்திற்கு எதிரானது.

தடைசெய்யப்பட்ட நேரங்களில் நீங்கள் பொது இடங்களில் மதுபானம் அருந்தினால், உங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு, உங்கள் வேலை அனுமதிச்சீட்டு ரத்து செய்யப்படும்.

மதுபானச் சட்டங்கள் பற்றிய தகவலுக்கு, தயவுசெய்து www.mha.gov.sg என்ற இணையத்தளத்தைப் பார்க்கவும்.

# சிங்கப்பூரில் வெளியில் சென்று வருதல்

சிங்கப்பூரில் வெளியிடங்களுக்குச் சென்று வருவது எளிது. சிங்கப்பூரில் உள்ள பல்வேறு வகையான போக்குவரத்து வசதிகள் பின்வருமாறு:

- பேருந்து
- பெருவிரைவு ரயில் (MRT)
- இலகு ரயில் (LRT)
- டெக்ஸி
- தனியார் வாடகை வாகனங்கள்

## ஈசி-லிங்க் (EZ- Link) அட்டைகள்

பேருந்து, பெருவிரைவு ரயில் அல்லது இலகு ரயில் மூலம் நீங்கள் பயணம் செய்ய, உங்களுக்கு ஈசி-லிங்க் அட்டை தேவைப்படும். இதனைப் பெருவிரைவு ரயில் நிலையங்களிலும் பேருந்து நிலையங்களிலும் வாங்கலாம். உங்கள் ஈசி-லிங்க் அட்டையில் நிரப்பப்பட்ட தொகை இருக்கும். பெருவிரைவு ரயில் நிலையங்களிலும் பேருந்து நிலையங்களிலும் அமைந்துள்ள கட்டண இயந்திரங்களின் மூலமாக உங்கள் அட்டையில் தொகை நிரப்பிக்கொள்ளலாம். உங்கள் வங்கியின் தானியங்கி அட்டையை உபயோகித்து அட்டையில் தொகை நிரப்பிக்கொள்ளலாம். உதவி தேவைப்பட்டால், பெருவிரைவு ரயில் நிலையங்களிலும் பேருந்து நிலையங்களிலும் உள்ள தகவல் முகப்புகளின் அலுவலர்களை அணுகலாம்.







*பேருந்து நிறுத்தங்கள், பெருவிரைவு ரயில் நிலையங்கள், இலகு ரயில் நிலையங்கள் ஆகிய இடங்களில் பேருந்து மற்றும் ரயில் செல்வழிகளும் கட்டண விவரங்களும் காட்டப்பட்டிருக்கும்.*

## பொதுப் போக்குவரத்தில் பின்பற்றவேண்டிய நன்னடத்தைகள்

பேருந்துகளிலும் ரயில்களிலும் பயணம் செய்யும்போது சக பயணிகளிடம் கனிவாக நடந்துகொள்ளுங்கள்.

- பேருந்தில் அல்லது ரயிலில் ஏறக் காத்திருக்கும்போது வரிசையில் நிற்கவும்
- உங்கள் பயண இருக்கையை, வயதான பயணி போன்ற நிற்கச் சிரமப்படும் ஒருவருக்கு விட்டுக்கொடுக்கவும்.
- நின்றுகொண்டு பயணிக்கும்போது, நுழைவாயிலை மறைக்காமல் உட்புறமாக நகர்ந்து செல்லவும். இதன்வழி மற்றவர்கள் ஏறுவதற்கும் இறங்குவதற்கும் இடையூறாக இருக்காது.
- உள்ளே ஏறுவதற்கு முன்பு வெளியே இறங்குபவர்களுக்கு வழிவிடவும்.
- உங்கள் பையைக் கீழே வைத்து விடுங்கள். இதன்வழி மற்றவர்கள் சுலபமாக நகர அதிக இடம் கிடைக்கும்.

## சாலையில் பின்பற்றவேண்டிய பாதுகாப்பு விதிமுறைகள்

### பாதுகாப்புடன் மிதிவண்டி ஓட்டுதல்

நீங்கள் மிதிவண்டி ஓட்டினால், பாதுகாப்பாக ஓட்டுங்கள்.




- மிதிவண்டியை அதற்குரிய பாதைகளில் மட்டுமே எப்போதும் ஓட்டவும்; பிற மிதிவண்டி ஓட்டுநர்களை அல்லது பாதசாரிகளைக் கவனத்தில் கொள்ளவும்.
- பாதசாரிகளைக் கவனத்தில் கொண்டு மெதுவாகச் செல்லவும். பாதசாரிகளை எச்சரிக்க, குறிப்பாக பகிரப்படும் நடைபாதைகளில் ஒட்டும்பொழுது, உங்கள் மிதிவண்டியின் எச்சரிக்கை மணியை தூரத்தில் வரும்பொழுதே ஒலிக்கவும்.
- போக்குவரத்து விதிகளைப் பின்பற்றி சாலையின் ஓரத்தை ஒட்டியே செல்லவும். சாலையின் நடுவில் அல்லது போக்குவரத்திற்கு எதிராக மிதிவண்டியை ஓட்டிச் செல்லவேண்டாம்.
- மிதிவண்டி ஓட்டும்பொழுது, மிதிவண்டிகள் நிறுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட நிறுத்துமிடங்களில் உங்கள் மிதிவண்டியை நிறுத்திவைக்கவும். உங்கள் மிதிவண்டியை சாலைகளிலோ அல்லது நடைபாதைக்கு நடுவிலோ நிறுத்திவிட்டுச் செல்லாதீர்கள். ஏனெனில், இது மற்ற வாகன ஓட்டுநர்களுக்கும் பாதசாரிகளுக்கும் இடையூறாக இருக்கும்.

### சாலைப் பாதுகாப்பு

சாலையில் செல்லும்போது பாதுகாப்பாகச் செல்வது மிகவும் முக்கியம்.

- போக்குவரத்து விதிமுறைகளைப் பின்பற்றவும். எல்லா இடங்களிலும் சாலையைக் கடக்கவேண்டாம். எப்போதும் போக்குவரத்து விளக்குகள் உள்ள இடங்களில் சாலையைக் கடக்கவும்.
- போக்குவரத்து விளக்கு பச்சை நிறமாக இருக்கும்போது சாலையைக் கடக்கவும்.
- சாலையின் மறுபுறம்த்திற்குப் பாதுகாப்பாகக் கடந்து செல்ல, பாதசாரிகளுக்கான சாலைக் கடப்பிடம், மேம்பாலத்தை அல்லது சுரங்கப்பாதைகளைப் பயன்படுத்தவும்.



- வாகனம் ஓட்டினால், பாதசாரிகளுக்கு வழிவிடவும். சாலைத் தொடக்கங்கள், சாலைச் சந்திப்புகள் அல்லது பாதசாரிகளுக்கான கடப்புகள் ஆகியவற்றை அணுகும்போது மெதுவாகச் செல்லவும்.

### கனரக வாகனங்களில் பயணம் செய்தல்

நீங்கள் பணிபுரியும் இடத்துக்கும் தங்கும் இடத்திற்கும் இடையில் உங்கள் முதலாளி உங்களுக்குப் போக்குவரத்து வசதி வழங்கலாம். இருப்பினும், நெரிசலான லாரி போன்ற வாகனங்களில் நீங்கள் ஆபத்தான சூழ்நிலையில் பயணிக்க நேர்ந்தால், தயவுசெய்து உங்கள் முதலாளியிடம் தெரிவிக்கவும். உங்கள் பாதுகாப்பு முக்கியமானது. உங்கள் முதலாளி உங்களுக்கு உதவ மறுத்தால், 1800-2255-582 என்ற எண்ணில் நிலப் போக்குவரத்து ஆணையத்திடம் (LTA) புகாரளிக்கவும்.










# சிங்கப்பூரில் வேலை செய்தல்

சிங்கப்பூரில் பணிபுரிய, செல்லுபடியாகும் வேலை அனுமதிப் பத்திரத்தை நீங்கள் வைத்திருக்க வேண்டும். மேலும், வேலை அனுமதிப் பத்திர நிபந்தனைகளுக்கும் உட்படவேண்டும்.

## கொள்கை ஒப்புதல் (IPA) கடிதம்

உங்கள் சொந்த நாட்டிலிருந்து புறப்படுவதற்கு முன், உங்கள் முதலாளி அல்லது சொந்த நாட்டு முகவரிடமிருந்து உங்கள் தாய்மொழியில் நீங்கள் ஒரு கொள்கை ஒப்புதல் (ஐபிஏ) கடிதத்தை (5-6 பக்கங்கள்) பெறவேண்டும். மனிதவள அமைச்சு வழங்கும் அந்தக் கடிதம், சிங்கப்பூரில் உங்கள் வேலை பற்றிய முழுத்தகவல்களையும் கொண்டிருக்கும். உங்கள் கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை உங்கள் முதலாளி நிறைவேற்றவேண்டும். அவர், உங்கள் அனுமதியின்றி அதிலிருக்கும் நிபந்தனைகளை மாற்ற முடியாது. உங்கள் கொள்கை ஒப்புதல் கடிதத்தில் உள்ள பின்வருவனவற்றை கவனியுங்கள்:



FIWPS111Eb_W2 – IPA Work Permit 0 37357219 / 09 JAN 2021 EMPLOYEE'S COPY

MINISTRY OF MANPOWER

ALAGU THAVASU
C/O
A.D. PREFAB PTE LTD
19 TOH YI DRIVE
#01-119 TOH YI GARDENS
SINGAPORE 590019

14 Jan 2021

**Your application is approved**
**உங்கள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டது**

NAME OF FOREIGN WORKER
ALAGU THAVASU
WORK PERMIT NO.
0 37357219

Dear ALAGU THAVASU

Your application for a Work Permit has been approved in-principle. This letter is proof of this and you can:

- Use it as a visa to enter Singapore.
- Start work on the second day of your arrival.

**If you do not enter Singapore by 11 Apr 2021, this approval will expire.**

வேலை அனுமதிச்சீட்டுக்கான உங்கள் விண்ணப்பம் கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கான சான்றே இந்தக் கடிதமாகும். மேலும், நீங்கள்:

- இதை சிங்கப்பூருக்குள் நுழைவதற்கான ஒரு விசாவாகப் பயன்படுத்த முடியும்
- சிங்கப்பூருக்கு வந்திறங்கிய மறுநாள் வேலையைத் தொடங்க முடியும்

**நீங்கள் சிங்கப்பூருக்குள் 11 Apr 2021 -க்குள் நுழையவில்லை எனில், இந்த அனுமதி காலாவதியாகிவிடும்.**

Yours sincerely

Penny Han (Mrs)
Controller of Work Passes

**Before you leave home**
**நீங்கள் தாய்நாட்டிலிருந்து புறப்படுவதற்கு முன்னர்**

**Check your employment details on page 2.**
**பக்கம் 2-இல் வழங்கப்பட்டுள்ள உங்கள் வேலைவாய்ப்பு விவரங்களைச் சரிபார்க்கவும்.**

**Within 14 days of your arrival**
**நீங்கள் வந்துசேர்ந்த 14 நாட்களுக்குள்**

**The steps to receive your Work Permit card must be completed.**
**உங்களின் அசல் கல்விச் சான்றிதழ்கள் அல்லது திறன்களின் சான்றிதழ்கள் அனைத்தையும் கொண்டு வாருங்கள்.**


**IMPORTANT**

Make sure this approval is still valid using www.mom.gov.sg > search for 'validity check' > click 'Work Permit Validity Check via Work Permit Online (Non-login)'.

இந்த ஒப்புதல் இன்னமும் செல்லுபடியாகிறதா என்பதை அறிய, www.mom.gov.sg > என்ற இணையத்தளத்தில் 'validity check' என்பதைத் தேடிக்கண்டறிந்து, 'Work Permit Validity Check via Work Permit Online (Non -login)' என்பதைக் கிளிக் செய்யவும்.

Ministry of Manpower Work Pass Division
Web http://www.mom.gov.sg Contact Us http://www.mom.gov.sg/contact Page 1 of 6

1 உங்கள் பெயர் மற்றும் வேலை அனுமதி எண்



FIWPS111Eb_W2 – IPA Work Permit 0 37357219 / 09 JAN 2021

EMPLOYEE'S COPY

MINISTRY OF MANPOWER

SB Transmission Ref No:0545961

**Check your employment details**

If you find a problem, please contact your employer or employment agent.

உங்களுடைய வேலைவாய்ப்பு விவரங்களைச் சரிபார்க்கவும்

நீங்கள் ஒரு பிரச்சனையைக் கண்டறிந்தால், உங்களுடைய முதலாளியை அல்லது வேலைவாய்ப்பு நிறுவனத்தைத் தொடர்புகொள்ளுங்கள்.

Your particulars
உங்கள் விவரங்கள்

Your name
ALAGU THAVASU

Date of birth / Sex
15 JUL 1997 / MALE

Nationality / Citizenship
INDIAN

Passport number
P1307343

Work Permit number / FIN
0 37357219 / G2921918X

Date of application
09 JAN 2021

Your employment info

Name of employer
A.D. PREFAB PTE LTD

Industry
CONSTRUCTION

Occupation
CONSTRUCTION WORKER

S'pore employment agency (EA)
PO HOCK PTE LTD

Agency fee for S'pore EA (exclude fees for overseas expenses)
S$ 0

Your employment terms
உங்கள் வேலை விதிமுறைகள்

Housing provided
YES

Period of Work Permit
1 YEAR(S)

Normal hours of work per week (excluding breaks)
44.0

Number of working days per week
6.000

Rate of pay overtime work
S$ 10.23

Daily basic rate of pay (for work on rest day/public holiday)
S$ 50.00

Your salary info
உங்கள் ஊதியம் குறித்த விவரம்

Monthly salary
[Basic monthly salary + Fixed allowances – All monthly deductions]
S$ 1300

Basic monthly salary
S$ 1300

Fixed monthly allowances
S$ 0

Monthly housing, amenities and services deductions
S$ 0

Monthly deduction for others
S$ 0

**IMPORTANT**

Once you start work, your employer must give you a written copy of key employment terms within 14 days. It should state your job scope, working days and hours, basic monthly salary and terms such as deductions and leave entitlements.

நீங்கள் வேலை செய்யத் தொடங்கியதும், உங்கள் முதலாளி உங்களுக்கு முக்கிய வேலைவாய்ப்பு நிபந்தனைகள் அடங்கிய ஒரு எழுத்துவடிவிலான ஒப்பந்த நகலை 14 நாட்களுக்குள் வழங்க வேண்டும். அதில் உங்கள் வேலையின் வரையறை, வேலை நாட்கள், வேலை நேரங்கள், அடிப்படை மாதாந்தர ஊதியம் மற்றும் கழிப்புத்தொகைகள் மற்றும் விடுமுறைக்கான உரிமைகள் போன்ற நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

Do not pay any fees for the $5000 security bond, levy, work permit application or renewal or cancellation, medical insurance or examinations, training courses and the cost of your journey home. These fees are to be paid by your employer.

$5000 பிணைப் பத்திரம், தீர்வை, வேலை அனுமதிச்சீட்டு விண்ணப்பம் அல்லது புதுப்பித்தல் அல்லது ரத்து, மருத்துவக் காப்பீடு அல்லது பரிசோதனைகள், பயிற்சி வகுப்புகள் மற்றும் நீங்கள் தாய்நாட்டிற்குச் செல்வதற்கான பயணக் கட்டணம் ஆகியவற்றுக்காக நீங்கள் எந்தக் கட்டணங்களையும் செலுத்த வேண்டாம். இக்கட்டணங்கள் உங்களுடைய முதலாளியால் செலுத்தப்பட வேண்டும்.

Ministry of Manpower Work Pass Division
Web http://www.mom.gov.sg Contact Us http://www.mom.gov.sg/contact
Page 2 of 6

2 உங்கள் முதலாளியின் பெயர்


3 உங்கள் வேலை

4 உங்கள் சிங்கப்பூர் வேலைவாய்ப்பு நிறுவனம் பற்றிய தகவல் மற்றும் உங்கள் சிங்கப்பூர் வேலைவாய்ப்பு நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய முகவர் கட்டணம்

5 வேலை அனுமதி செல்லுபடியாகும் காலகட்டம்

6 உங்கள் அடிப்படை மாதச் சம்பளம், நிலையான மாதச் சம்பளம், நிலையான மாதாந்திரப் படித்தொகைகள் மற்றும் மாதாந்திரப் பிடித்தங்கள்

7 நீங்கள் தங்குவதற்கான வீட்டுவசதி



FIWPS111Eb_W2 – IPA Work Permit 0 37357219 / 09 JAN 2021

EMPLOYEE'S COPY

MINISTRY OF MANPOWER

**Know your rights and responsibilities**
**உங்கள் உரிமைகளையும் பொறுப்புகளையும் தெரிந்துகொள்ளுங்கள்**

**You can only work in Singapore as a / an CONSTRUCTION WORKER for A.D. PREFAB PTE LTD.**

நீங்கள் A.D. PREFAB PTE LTD -க்காக CONSTRUCTION WORKER -ஆக மட்டுமே சிங்கப்பூரில் வேலைசெய்ய முடியும்.

**Your employer can reduce your monthly salary only if you agree.**
Do not sign on any documents if you do not agree. If your employer reduces your salary without your agreement, you should approach MOM.


நீங்கள் ஒப்புக்கொண்டால் மட்டுமே உங்கள் முதலாளியால் உங்கள் மாதாந்தரச் சம்பளத்தைக் குறைக்க முடியும்.
உங்களுக்கு ஒப்புதல் இல்லை என்றால், எந்த ஆவணத்திலும் கையொப்பமிடாதீர்கள். உங்கள் முதலாளி உங்களுடைய ஒப்புதல் இன்றி உங்கள் ஊதியத்தைக் குறைக்கிறார் எனில், நீங்கள் மனிதவள அமைச்சை (MOM) அணுக வேண்டும்.

**You or your employer can end your employment at any time with sufficient notice.**
If you go missing during employment, your employer can cancel your Work Permit. If you continue to be in Singapore, you may be fined, jailed or caned for overstaying.

போதுமான அறிவிப்பை வழங்குவதன் மூலம் நீங்களோ உங்கள் முதலாளியோ எந்த நேரத்திலும் உங்கள் வேலைவாய்ப்பை முடிவுக்குக் கொண்டுவரலாம்.
வேலைவாய்ப்பின் போது நீங்கள் காணாமல் போய்விட்டால், உங்கள் முதலாளி உங்கள் வேலை அனுமதிச்சீட்டை இரத்து செய்யலாம். நீங்கள் சிங்கப்பூரில் தொடர்ந்து இருந்தீர்களேயானால், அனுமதிக்கப்பட்ட காலத்திற்குமேல் சட்டவிரோதமாக தங்கியிருப்பதற்காக உங்களுக்கு அபராதம், சிறைத்தண்டனை அல்லது பிரம்படி விதிக்கப்படலாம்.

Ministry of Manpower Work Pass Division
Web http://www.mom.gov.sg Contact Us http://www.mom.gov.sg/contact
Page 3 of 6

8 உங்கள் கொள்கை ஒப்புதலில் குறிப்பிட்டுள்ள வேலையில் மட்டும் தான் நீங்கள் பணியாற்ற முடியும்



FIWPS111Eb_W2 – IPA Work Permit 0 37357219 / 09 JAN 2021 EMPLOYEE'S COPY

MINISTRY OF MANPOWER

## Know your rights and responsibilities
## உங்கள் உரிமைகளையும் பொறுப்புகளையும் தெரிந்துகொள்ளுங்கள்

**You must obey the Employment of Foreign Manpower Act and the Conditions of Work Permit. If you don't, MOM can revoke your Work Permit, prosecute and send you home.**
You may read the rules at www.mom.gov.sg.

நீங்கள் வெளிநாட்டு ஊழியர் வேலை நியமனச் சட்டத்தையும் வேலை அனுமதிச்சீட்டின் நிபந்தனைகளையும் பின்பற்ற வேண்டியது கட்டாயமாகும். நீங்கள் அவற்றைப் பின்பற்றவில்லை எனில், MOM உங்களுடைய வேலை அனுமதிச்சீட்டை இரத்து செய்யலாம், சட்ட நடவடிக்கை எடுக்கலாம் மற்றும் உங்களைத் தாய்நாட்டிற்குத் திருப்பியனுப்பலாம்.
நீங்கள் விதிமுறைகளை www.mom.gov.sg -இல் வாசிக்கலாம்.

**If you use an agent in your home country/region, be careful about fees and promises.**
The Singapore Government is unable to help you with disputes with your agent in your home country/region.

நீங்கள் உங்கள் தாய்நாட்டில்/பிராந்தியத்தில் ஒரு முகவரின் (Agent) உதவியை நாடியிருந்தால், கட்டணங்கள் மற்றும் அவரின் வாக்குறுதிகளைப் பற்றி மிகவும் கவனத்துடன் இருங்கள். உங்கள் தாய்நாட்டில்/பிராந்தியத்தில் உங்களுடைய முகவருடன் ஏற்படும் பிரச்சனைகளுக்கு சிங்கப்பூர் அரசு எந்தவிதத்திலும் உங்களுக்கு உதவி செய்ய முடியாது.


**If you work more than the normal hours of work indicated in the table below, your employer must pay you the rate of pay for overtime work for each extra hour worked.**

கீழேயுள்ள அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இயல்பான மணி நேர வேலைகளை விட நீங்கள் அதிகமாக வேலை செய்தால், வேலை செய்த ஒவ்வொரு கூடுதல் மணி நேரத்திற்கும் மேலதிக நேர வேலைக்கான சம்பள வீதத்தை உங்களுடைய முதலாளி உங்களுக்குத் தரவேண்டும்.

| If you work<br>நீங்கள் இவ்வாறு வேலை செய்தால் | Normal hours of work<br>சாதாரணமாக வேலை செய்யும் மணி நேரங்கள் |
|---|---|
| 5 days or less a week<br>ஒரு வாரத்தில் 5 நாட்கள் அல்லது குறைவு | 9 hours per day or 44 hours a week<br>ஒரு நாளில் 9 மணி நேரங்கள் அல்லது வாரத்தில் 44 மணி நேரங்கள் |
| More than 5 days a week<br>ஒரு வாரத்தில் 5 நாட்களுக்கு மேல் | 8 hours per day or 44 hours a week<br>ஒரு நாளில் 8 மணி நேரங்கள் அல்லது வாரத்தில் 44 மணி நேரங்கள் |

Ministry of Manpower Work Pass Division
Web http://www.mom.gov.sg Contact Us http://www.mom.gov.sg/contact Page 4 of 6

**9** நீங்கள் சிங்கப்பூரில் இருக்கும்போது, வேலை அனுமதி நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்



FIWPS111Eb_W2 – IPA Work Permit 0 37357219 / 09 JAN 2021 EMPLOYEE'S COPY

MINISTRY OF MANPOWER

## Know your rights and responsibilities
## உங்கள் உரிமைகளையும் பொறுப்புகளையும் தெரிந்துகொள்ளுங்கள்

**Your employer must give you one rest day each week with no pay.**
If your employer asks you to work on your rest day, you must be paid 2 times your daily basic rate of pay.

உங்கள் முதலாளி உங்களுக்கு ஒவ்வொரு வாரமும் ஒரு ஓய்வு தினத்தை ஊதியம் இல்லாமல் வழங்க வேண்டும்.
உங்கள் முதலாளி உங்களை உங்கள் ஓய்வு தினத்தன்று வேலை செய்யச் சொன்னால், அவர் உங்களுக்கு 2 நாட்களுக்கான அடிப்படை ஊதியத்தை வழங்க வேண்டும்.

**There are 11 public holidays every year. You must be paid your gross rate of pay even if you do not work on a public holiday.**
If your employer asks you to work on a public holiday, they must pay you 2 times the daily basic rate of pay, or give you a day off.


ஒவ்வொரு ஆண்டும் 11 பொது விடுமுறை தினங்கள் உள்ளன. நீங்கள் ஒரு பொது விடுமுறை தினத்தன்று வேலை செய்யாவிட்டாலும் கூட உங்களுக்கு அந்நாளுக்கான முழு ஊதியம் வழங்கப்பட வேண்டும்.
உங்கள் முதலாளி ஒரு பொது விடுமுறை தினத்தன்று உங்களை வேலை செய்யச் சொன்னால், அவர் உங்களுக்கு 2 நாட்களுக்கான அடிப்படை ஊதியத்தை வழங்க வேண்டும், அல்லது உங்களுக்கு ஒரு நாள் விடுமுறை அளிக்க வேண்டும்.

**Your employer must take care of your safety, health and well-being.**
You should have a safe work place, proper housing and medical care.

உங்களின் பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை உங்கள் முதலாளி பேணிப் பராமரிக்க வேண்டும்.
உங்களுக்குப் பாதுகாப்பான வேலையிடம், முறையான குடியிருப்பு வசதி மற்றும் மருத்துவப் பராமரிப்பு வழங்கப்பட வேண்டும்.

Ministry of Manpower Work Pass Division
Web http://www.mom.gov.sg Contact Us http://www.mom.gov.sg/contact Page 5 of 6

**10** உங்கள் ஓய்வு நாள் உரிமைகள்



FIWPS111Eb_W2 – IPA Work Permit 0 37357219 / 09 JAN 2021 EMPLOYEE'S COPY

MINISTRY OF MANPOWER

## Receive your Work Permit card
## உங்களுடைய வேலை அனுமதிச்சீட்டு அட்டையைப் பெற்றுக்கொள்ளுங்கள்

Once you arrive in Singapore, your employer must complete the following steps within 14 days. Otherwise, this approval will be withdrawn and you may be sent home.

நீங்கள் சிங்கப்பூருக்கு வந்துசேர்ந்ததும், உங்கள் முதலாளி பின்வரும் வழிமுறைகளை 14 நாட்களுக்குள் செய்துமுடித்திருக்க வேண்டும். இல்லையெனில், இந்த அனுமதி திரும்பப் பெறப்பட்டு, நீங்கள் தாய்நாட்டிற்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படலாம்.

**Arrange a medical examination for you.**
You must pass the examination to work in Singapore.

உங்களுக்கு ஒரு மருத்துவப் பரிசோதனையை ஏற்பாடு செய்தல்.
நீங்கள் சிங்கப்பூரில் வேலை செய்வதற்கான தேர்வில் தேர்ச்சி பெற்றாக வேண்டும்.

**Arrange for you to attend the Construction Safety Orientation Course or Apply Workplace Safety and Health in Construction Sites course, if you do not have a certificate that is valid for at least 1 month.**

குறைந்தபட்சம் 1 மாதத்திற்கான செல்லுபடியாகும் சான்றிதழை நீங்கள் வைத்திருக்கவில்லை என்றால், கட்டுமானத் தொழில்துறைக்குத் தொடர்புடைய பாதுகாப்புப் பயிற்சி வகுப்பை நீங்கள் நிறைவுசெய்வதற்கான கலந்துகொள்வதற்கான ஏற்பாடு.

**Apply for your Work Permit card to be issued and delivered.**

உங்களுடைய வேலை அனுமதிச்சீட்டு அட்டையை வழங்குவதற்கும், ஒப்படைப்பதற்கும் விண்ணப்பம் செய்தல்.

Ministry of Manpower Work Pass Division
Web http://www.mom.gov.sg Contact Us http://www.mom.gov.sg/contact Page 6 of 6

**11** உங்கள் முதலாளி 14 நாட்களுக்குள் முடிக்க வேண்டிய படிகள்


உங்கள் கொள்கை ஒப்புதல் கடிதத்தில் காட்டப்பட்டுள்ள சம்பளத்தை நீங்கள் பெறவேண்டும். உங்களிடம் எழுத்துபூர்வ ஒப்புதல் பெறாமல் உங்கள் முதலாளி உங்கள் சம்பளத்தைக் குறைத்தால், மனிதவள அமைச்சிடம் உதவி நாடவும்.

சிங்கப்பூரில் நீங்கள் வேலையில் இருக்கும் காலம் முழுவதும் உங்கள் கொள்கை ஒப்புதல் கடிதத்தின் நகலை வைத்திருக்க வேண்டும்.

## வேலை அனுமதி

உங்கள் வேலை அனுமதி அட்டையை எல்லா நேரங்களிலும் உங்களிடம் வைத்திருக்க வேண்டும். உங்கள் வேலை அனுமதி அட்டை உங்களுக்குக் கிடைக்கவில்லை என்றால், தயவுசெய்து உங்கள் கொள்கை ஒப்புதல் கடிதத்தை வைத்திருங்கள்.

மனிதவள அமைச்சு அல்லது ஏதேனும் பொது அமைப்புகள் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும்போது, உங்கள் வேலை அனுமதி அட்டையை நீங்கள் காட்ட வேண்டும்.







## கடவுச்சீட்டு

உங்கள் கடவுச்சீட்டு (Passport) உங்களது தனிப்பட்ட சொத்து. உங்கள் வேலைக்கான நிபந்தனையாக, கடவுச்சீட்டை உங்கள் முதலாளி வைத்துக்கொள்ளக்கூடாது. உங்கள் சார்பாக உங்கள் முதலாளி உங்கள் கடவுச்சீட்டை வைத்திருந்தால், உங்கள் கோரிக்கையின்பேரில் அது உடனடியாக உங்களிடம் திருப்பித் தரப்படவேண்டும்.




## உதவி நாடுங்கள்

உங்கள் சம்மதமின்றி உங்கள் முதலாளி உங்கள் சம்பளத்தைக் குறைத்தால், உங்கள் கடவுச்சீட்டை அல்லது வேலை அனுமதி அட்டையை நீங்கள் கோரும்போது திருப்பித் தரவில்லை என்றால், நீங்கள் உடனடியாக **6438 5122** என்ற எண்ணை அழைத்து மனிதவள அமைச்சிடம் புகார் அளிக்கவும், அல்லது 1500 பெண்டமியர் சாலை, சிங்கப்பூர் 339946 என்ற முகவரியில் உள்ள மனிதவள அமைச்சின் சேவை மையத்தை அணுகவும்.

# வேலை நியமன உரிமைகள்

**சிங்கப்பூரின் வேலை மற்றும் வாழ்க்கை முறைகள்**

உங்கள் முதலாளி உங்களுக்கு முக்கிய வேலை விதிமுறைகளை எழுத்துபூர்வமாகக் கொடுக்கவேண்டும். நீங்கள் ஒப்புக்கொண்ட வேலை நியமன விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் குறித்த கீழ்க்கண்டவை உள்ளிட்ட தகவல்கள் அதில் இருக்க வேண்டும்:


- மாதச் சம்பளம், சம்பளம் தரப்படும் தேதி மற்றும் மிகைநேர ஊதியத்திற்கான விவரங்கள்
- வேலை நேரம் மற்றும் ஓய்வு நாட்கள் போன்ற வேலை விவரங்கள்.
- சம்பளத்துடன் கூடிய விடுப்பு (வருடாந்திர விடுப்பு, மருத்துவ விடுப்பு மற்றும் பொது விடுமுறைகள் உட்பட) மற்றும் மருத்துவ அனுகூலங்கள்

பின்வருபவற்றின் தொடர்பில் உங்களுக்கு ஏதேனும் குறைகள் இருந்தால், தயவுசெய்து மனிதவள அமைச்சிடம் அல்லது சர்ச்சை நிர்வாகத்துக்கான முத்தரப்புக் கூட்டணியிடம் **(Tripartite Alliance for Dispute Management - TADM)** கூடிய விரைவில் புகார் அளிக்கவும். TADM சேவை MOM சேவைகள் மையத்தில் அமைந்துள்ளது.

## (a) சம்பளம் / மிகைநேர ஊதியம்



1. நீங்கள் சிங்கப்பூரில் உங்கள் பெயரில் ஒரு தனிப்பட்ட வங்கிக் கணக்கைத் திறந்து, உங்கள் சம்பளத்தை அந்த வங்கிக் கணக்கில் வரவு வைக்குமாறு உங்கள் முதலாளியிடம் கோரவேண்டும். இது உங்கள் முதலாளியுடனான சம்பளம் குறித்த எந்தவொரு சச்சரவையும் குறைக்கும். அவ்வாறு செய்ய நீங்கள் கோரியிருந்தால், உங்கள் முதலாளி உங்கள் சம்பளத்தை உங்கள் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தவேண்டும்.





2. உங்கள் முதலாளி உங்கள் சம்பளத்தை ஒரு மாதத்திற்கு ஒரு முறை, அதுவும் சம்பள காலம் முடிந்து 7 நாட்களுக்குள் கொடுக்கவேண்டும்,. உங்களுக்கும் உங்கள் முதலாளிக்கும் இடையில் ஒப்புக் கொள்ளப்பட்ட எந்தச் சம்பளக் காலமும் ஒரு மாதத்திற்கு மிகாமல் இருக்கவேண்டும்.



3. நீங்கள் மாதத்தில் மிகைநேர வேலை செய்திருந்தால், உங்கள் முதலாளி குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு ஒரு முறையாவது, சம்பளக் காலம் முடிந்து 14 நாட்களுக்குள் மிகைநேரத்திற்கான சம்பளத்தைக் கொடுக்கவேண்டும்.



4. உங்களின் எழுத்துபூர்வ அனுமதியின்றி, உங்கள் கொள்கை ஒப்புதல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைச் சம்பளம், நிலையான படித்தொகைகள் ஆகியவற்றைக் குறைக்கவோ அல்லது நிலையான பிடித்தங்களைக் கூட்டவோ உங்கள் முதலாளிக்கு அனுமதி இல்லை.



5. நீங்கள் ஒப்புக்கொண்டால் மட்டுமே உங்கள் சம்பளத்தை மாற்ற முடியும்; உங்கள் சம்பளத்தை மாற்றுவதற்கு உங்கள் முதலாளி பின்வருவனவற்றைச் செய்யவேண்டும்:

- **உங்கள் சம்மதத்தை எழுத்துபூர்வமாக பெறவேண்டும்**
- மனிதவள அமைச்சிடம் தெரிவிக்கவேண்டும்
- மாற்றப்பட்ட சம்பளத்துடன் வகைப்படுத்தப்பட்ட சம்பள ரசீதை உங்களுக்கு வழங்கவேண்டும்



6. உங்கள் முதலாளி உங்கள் சம்பள ரசீதை குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு ஒரு முறையும், சம்பளம் செலுத்தி 3 வேலை நாட்களுக்குள்ளும் உங்களுக்கு வழங்கவேண்டும். சம்பள ரசீதில் அடிப்படைச் சம்பளம், படித்தொகைகள், பிடித்தங்கள், வேலை செய்த மிகைநேரம், மிகைநேர ஊதியம் போன்ற அனைத்து சம்பள விவரங்களும் இருக்க வேண்டும்.



7. உங்களுக்குப் புரியாத அல்லது உங்களுக்கு உடன்பாடு இல்லாத அல்லது வெற்று ஆவணங்களில் கையெழுத்திட வேண்டாம். கட்டண ரசீதுகள் அல்லது சம்பள ரசீதுகள் போன்ற வெற்று ஆவணங்களில் கையெழுத்திடுமாறு உங்கள் முதலாளி உங்களிடம் கேட்டால், நீங்கள் மனிதவள அமைச்சை அணுகவேண்டும். பொதுவாக, ஆரம்பத்திலேயே புகார் கொடுக்க முன்வராத ஊழியர்களுக்கு, அவர்களின் கூற்றுகளை நிரூபிப்பதில் சிரமம் ஏற்படலாம்.

## (b) சம்பளப் பிடித்தங்கள்

- உங்கள் சம்பளத்திலிருந்து உங்கள் முதலாளி எந்தப் பிடித்தங்களையும் செய்யமுடியாது. அவர்கள் பின்வரும் சூழ்நிலைகளில் மட்டுமே அவ்வாறு செய்ய முடியும்:




உங்கள் முதலாளியின் அனுமதியின்றி நீங்கள் வேலைக்குச் செல்லாமல் இருந்தால்



நீங்கள் கோரிய உணவுக்கு உங்கள் முதலாளி பணம் செலுத்தி இருந்தால்



நீங்கள் ஏற்றுக்கொண்ட வீட்டுவசதி / தங்குமிடம், வசதிகள் மற்றும் சேவைகளுக்கு உங்கள் முதலாளி பணம் செலுத்தி இருந்தால்



உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொருட்கள் அல்லது பணம் இழக்கப்பட்டிருந்தால் அல்லது சேதமடைந்திருந்தால் (ஒரு முறை மட்டுமே பிடித்தம் செய்வது)



நீங்கள் பிடித்தத்துக்கு எழுத்துபூர்வ ஒப்புதல் அளித்துவிட்டீர்கள் என்றால் (பிடித்தம் கழிக்கப்படுவதற்கு முன்பு எந்த நேரத்திலும் உங்கள் சம்மதத்தைத் திரும்பப் பெறலாம்)

- சம்பளத்தில் பிடித்தம் செய்யப்பட்டால், எந்தவொரு சம்பளக் காலத்திலும் உங்கள் மொத்த சம்பளத்தில் இருந்து 50%-க்கும் அதிகமாக உங்கள் முதலாளி பிடித்தம் செய்ய முடியாது. பின்வரும் சூழ்நிலைகளில் செய்யப்படும் பிடித்தங்கள் இதில் உள்ளடங்கா:
  - நீங்கள் வேலைக்கு வராமல் இருத்தல்
  - உங்களுக்குக் கொடுக்கப்பட்ட முன்பணம், கடன்கள் அல்லது சம்பளத்திற்கு மேலாகக் கூடுதலாக வழங்கப்பட்ட தொகை ஆகியவற்றை வசூலித்தல்
  - நீங்கள் எழுத்துபூர்வ ஒப்புதல் அளித்த ஏதேனும் கூட்டுறவு சங்கத்திற்குப் பணம் செலுத்துதல்

## (c) வேலை நேரம் மற்றும் மிகைநேர வேலை

- நீங்கள் மாறுநேர வேலையில் இல்லாவிட்டால், உங்கள் ஒப்பந்தப்படியான வேலை நேரம் ஒரு நாளைக்கு 8 மணிநேரம் அல்லது வாரத்திற்கு 44 மணிநேரங்களுக்கு மிகாமல் இருக்கவேண்டும். உங்கள் வேலை நேரத்தில் உங்களுக்குக் கொடுக்கப்படும் ஓய்வு நேரம், தேநீர் இடைவேளை மற்றும் உணவுக்கு அனுமதிக்கப்பட்ட இடைவேளைகள் சேராது. உங்கள் ஒப்பந்தப்படியான வேலை நேரத்திற்கு மேலான அனைத்து வேலைகளும் மிகைநேர வேலையாகக் கருதப்படும். உங்களது ஒரு மணிநேர அடிப்படை ஊதியத்தின் 1.5 மடங்கு தொகையை மிகைநேர ஊதியமாக நீங்கள் கோரலாம்.
- நீங்கள் மாறுநேர வேலை செய்தால், ஒப்புக்கொள்ளப்பட்ட வேலை நேரம் 3 வாரங்களில், வாரத்திற்கு சராசரியாக 44 மணிநேரத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். ஒரு நாளைக்கான அதிகபட்ச வேலை நேரம் 12 மணிநேரம். ஒரு மாதத்திற்கான அதிகபட்ச மிகைநேரம் 72 மணிநேரம்.
- நீங்கள் பணிபுரிந்த மிகைநேரங்களை உங்கள் முதலாளி பதிவு செய்யவேண்டும். உங்கள் முதலாளியின் பதிவை நீங்கள் சரிபார்த்து, அது துல்லியமாக இருந்தால் மட்டுமே கையொப்பமிட வேண்டும். நீங்கள் உங்கள் முதலாளியின் பதிவுக்கு உடன்படவில்லை என்றால், அதில் கையெழுத்து இடுவதற்கு முன் உங்கள் முதலாளியிடம் ஆரம்பத்திலேயே தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும்.

**உங்களுக்கான மிகைநேர ஊதியத்தைக் கணக்கிடும் முறை:**

**முதலில் 1** உங்களின் மணிநேர அடிப்படை ஊதிய விகிதத்தைக் கணக்கிடுங்கள்:

$$\frac{12 \times \text{மாதாந்திர அடிப்படை ஊதியம்}}{52 \times 44} = \text{மணிநேர அடிப்படை ஊதிய விகிதம்}$$

**அடுத்து 2** உங்கள் மணிநேர மிகைநேர ஊதியத்தைக் கணக்கிடுங்கள்:

**[மணிநேர அடிப்படை ஊதிய விகிதம்] × [1.5]**
**= மிகைநேர ஊதியத்தின் மணிநேர விகிதம்**

**அடுத்து 3** உங்கள் மிகைநேர ஊதியத்தைக் கணக்கிடுங்கள்:

**[மிகைநேர ஊதியத்தின் மணிநேர விகிதம்] × [மிகைநேர வேலை நேரம்]**
**= மிகைநேர ஊதியம்**

## (d) மருத்துவ விடுப்பு




- உங்கள் முதலாளிக்காக நீங்கள் குறைந்தது 3 மாதங்களாவது பணியாற்றியிருந்தால், வெளிநோயாளி மருத்துவ விடுப்பும் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை செய்ய நேர்ந்தால் தேவைப்படும் விடுப்பும் சம்பளத்துடன் வழங்கப்படும். நீங்கள் வேலை செய்திருக்கும் காலத்தைப் பொறுத்து, சம்பளத்துடனான மருத்துவ விடுப்பு எத்தனை நாட்களுக்கு வழங்கப்படும் என்பது பின்வருமாறு நிர்ணயிக்கப்படுகிறது:

| வேலையில் சேர்ந்து இன்றுவரை நிறைவு செய்யப்பட்ட மாதங்கள் | ஓராண்டில் சம்பளத்துடனான வெளிநோயாளி மருத்துவ விடுப்பு (நாட்கள்) | ஓராண்டில் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற விடுப்பு (நாட்கள்) |
|---|---|---|
| 3 மாதங்கள் | 5 | 15 |
| 4 மாதங்கள் | 8 | 30 |
| 5 மாதங்கள் | 11 | 45 |
| 6 மாதங்கள் மற்றும் அதன்பிறகு | 14 | 60 |



- நீங்கள் மருத்துவ விடுப்புக்குத் தகுதி பெற, வேலைக்குச் செல்லத்தவறிய நேரத்திலிருந்து 48 மணி நேரத்திற்குள் உங்கள் முதலாளியிடம் தெரியப்படுத்த வேண்டும்.



- உங்களது வழக்கமான வேலை நாளில் மருத்துவ விடுப்பு எடுத்த காலத்திற்கான உங்கள் சம்பளத்தை உங்கள் முதலாளி உங்களுக்குச் செலுத்த வேண்டிய சூழ்நிலைகள் பின்வருமாறு:
  - மருத்துவப் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட மருத்துவர் மருத்துவ விடுப்புக்கான மருத்துவச் சான்றிதழ் வழங்கியிருந்தால்
  - அந்த ஆண்டில் உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மருத்துவ விடுப்பை நீங்கள் எடுத்து முடிக்காமல் இருந்தால்

## (e) ஓய்வு நாட்கள் மற்றும் பொது விடுமுறைகள்

- ஒவ்வொரு வாரமும் சம்பளமின்றி, ஓர் ஓய்வு நாள் எடுத்துக்கொள்ள உங்களுக்கு உரிமை உண்டு.
- தவிர்க்க இயலாத சூழ்நிலைகள் ஏற்பட்டாலொழிய, உங்கள் ஓய்வு நாளில் வேலை செய்யும்படி உங்கள் முதலாளி உங்களைக் கட்டாயப்படுத்த முடியாது, மேலும், அந்த நாளில் வேலை செய்ய உங்கள் உடன்பாட்டை அவர்கள் பெறவேண்டும்.

**ஓய்வு நாளில் வேலை செய்வதற்கான ஊதியம் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது:**

| வேலை மேற்கொள் ளப்பட்டது | உங்களது வழக்கமான தினசரி வேலை நேரங்களில் பாதி நேரம் வரை | உங்களது வழக்கமான தினசரி வேலை நேரங்களில் பாதிக்கும் மேல் | உங்களது வழக்கமான தினசரி வேலை நேரங்களுக்கு மேல் |
|---|---|---|---|
| முதலாளியின் வேண்டுகோளின்படி | ஒரு நாள் சம்பளம் | இரண்டு நாள் சம்பளம் | 2 நாள் சம்பளம் + மிகைநேர ஊதியம் |
| ஊழியரின் வேண்டுகோளின்படி | அரை நாள் சம்பளம் | ஒரு நாள் சம்பளம் | ஒரு நாள் சம்பளம் + மிகைநேர ஊதியம் |

- ஒரு வருடத்தில் 11 நாட்கள் சம்பளத்துடன் கூடிய பொது விடுமுறைகளை எடுத்துக்கொள்ள உங்களுக்கு உரிமை உண்டு.
  - நீங்கள் பொது விடுமுறை அன்று வேலை செய்யவில்லை என்றாலும், உங்கள் முதலாளி பொது விடுமுறைக்கான உங்கள் மொத்த சம்பளத்தை உங்களுக்குத் தரவேண்டும்.
  - நீங்கள் பொது விடுமுறை நாளில் வேலை செய்திருந்தால், உங்கள் முதலாளி அன்றைய வேலைக்குக் கூடுதலாக ஒரு நாளின் அடிப்படைச் சம்பளத்தை உங்களுக்குத் தரவேண்டும், அல்லது உங்களுக்கு ஒரு நாள் விடுமுறை அளிக்கவேண்டும், அல்லது அந்த வேலை நேரத்திற்குப் பதிலாக வேறு நேரம் ஒதுக்கித் தரவேண்டும் (இந்த நிபந்தனைகள் அனைத்தும் $2,600க்கு மேல் சம்பாதிக்கும் தொழிலாளர்கள் அல்லாதவர்களுக்கு மட்டுமே)

## (f) வருடாந்திர விடுப்பு

- நீங்கள் குறைந்தபட்சம் 3 மாதங்கள் உங்கள் முதலாளிக்காக வேலை செய்திருந்தால், உங்களுக்குச் சம்பளத்துடன் கூடிய வருடாந்திர விடுப்பு வழங்கப்படவேண்டும்.

- நீங்கள் ஒரு முதலாளியிடம் வேலை செய்த ஆண்டுகளின் அடிப்படையில் வருடாந்திர விடுப்பு நாட்கள் பின்வருமாறு நிர்ணயிக்கப்படுகிறது.

| தொடர்ச்சியாக வேலை செய்த ஆண்டுகள் | ஓர் ஆண்டுக்கான விடுப்பு நாட்கள் |
|---|---|
| முதல் ஆண்டு | 7 |
| இரண்டாவது ஆண்டு | 8 |
| மூன்றாவது ஆண்டு | 9 |
| நான்காவது ஆண்டு | 10 |
| ஐந்தாவது ஆண்டு | 11 |
| ஆறாவது ஆண்டு | 12 |
| ஏழாவது ஆண்டு | 13 |
| எட்டாவது ஆண்டும் அதற்கு மேலும் | 14 |

- நீங்கள் தொடர்ச்சியாக 12 மாதங்கள் ஒரே முதலாளியிடம் வேலை பார்க்கவில்லை எனில், அந்த ஆண்டில் வேலை பார்த்த மாதங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் உங்கள் வருடாந்திர விடுப்பு உரிமை கணக்கிடப்படும்.

### சம்பள கோரிக்கைகள் மற்றும் வேலை அனுகூலங்கள்

உங்கள் முதலாளிக்கு எதிராக உங்களுக்கு ஏதேனும் சம்பளம் அல்லது/ மற்றும் வேலைசார்ந்த தகராறுகள் இருந்தால், நீங்கள் கூடிய விரைவில் மனிதவள அமைச்சை அல்லது TADM-ஐ அணுக வேண்டும். முன்கூட்டியே புகார் கொடுக்க முன் வருவதன் மூலம், நீங்கள் பெறவேண்டிய சம்பளத்தை முழுமையாக மீட்டெடுப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கும்; மேலும், புதிய முதலாளியைத் தேடுவதற்கும் உங்களுக்கு நேரம் வழங்கப்படும். தேவைப்பட்டால், உங்களுக்கு உணவு மற்றும் வீட்டுவசதிக்கு உதவி கிடைக்கும்.

**முக்கியமான குறிப்பு**

உங்களுக்கு ஏதேனும் சம்பளம் தரவேண்டி இருந்தாலோ அல்லது வேறு ஏதேனும் கட்டணப் பாக்கி கொடுக்கவேண்டி இருந்தாலோ, உங்கள் முதலாளி உங்களை வலுக்கட்டாயமாக உங்கள் சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்ப முடியாது.

உங்களது சம்பள பாக்கி அல்லது கோரிக்கை நிலுவையில் இருக்கும்பொழுது, நீங்கள் வேறு வழி இல்லாமல் விமான நிலையத்திற்கு அனுப்பப்பட்டிருந்தால், நீங்கள் சிங்கப்பூர் குடிநுழைவு முகப்புகளில் இருக்கும் விமான நிலைய அதிகாரிகளை அணுக வேண்டும். பின்னர் உதவிக்காக நீங்கள் மனிதவள அமைச்சிற்கு அனுப்பப்படுவீர்கள்.

### உங்கள் சிங்கப்பூர் வேலைவாய்ப்பு நிறுவனம்

**வேலைவாய்ப்பு முகவர் கட்டணத்திற்கான வரம்பு**

உங்கள் வேலை அனுமதிச் சீட்டின் செல்லுபடியாகும் காலம் அல்லது வேலை நியமன ஒப்பந்தத்தின் காலம், இதில் எது குறைவானதோ அதைப் பொறுத்து, அந்தக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டுக்கும் சிங்கப்பூர் வேலைவாய்ப்பு முகவை நிறுவனத்திற்கு உங்களின் நிலையான ஒரு மாதச் சம்பளத்தின் தொகைக்கு மேல் கட்டணம் செலுத்தக்கூடாது. வேலைவாய்ப்பு முகவை நிறுவனத்தின் அதிகபட்சக் கட்டணம் 2 மாதச் சம்பளமாக வரையறுக்கப்பட்டுள்ளது. நீங்கள் செலுத்தும் எந்தவொரு கட்டணத்திற்கும், உங்களுக்கு வழங்கப்பட்ட சேவைகளையும் வசூலிக்கப்பட்ட தொகையையும் குறிப்பிடும் வகைப்படுத்தப்பட்ட ரசீதுகளை நிறுவனம் உங்களுக்குத் தரவேண்டும்.



**நிலையான மாதச் சம்பளம் =** அடிப்படை மாதச் சம்பளம் + நிலையான மாதாந்திர படித்தொகைகள்

### எடுத்துக்காட்டு 1

உங்கள் வேலை அனுமதிச் சீட்டும் வேலை நியமன ஒப்பந்தமும் 2 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் என்றால், சிங்கப்பூர் வேலைவாய்ப்பு நிறுவனத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய அதிகபட்ச முகவர் கட்டணம் உங்கள் நிலையான மாதச் சம்பளத்தின் **2 மாதத்** தொகையாகும்.

### எடுத்துக்காட்டு 2

உங்கள் வேலை அனுமதிச் சீட்டு 2 ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகையில், வேலை நியமன ஒப்பந்தம் ஓர் ஆண்டுக்கு மட்டுமே செல்லுபடியாகும் என்றால், சிங்கப்பூர் வேலைவாய்ப்பு நிறுவனத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய அதிகபட்ச முகவர் கட்டணம் உங்கள் நிலையான மாத சம்பளத்தின் **1 மாதத்** தொகையாகும்.

### எடுத்துக்காட்டு 3

உங்கள் வேலை அனுமதிச் சீட்டும் வேலை நியமன ஒப்பந்தமும் 2 வருடங்களுக்கும் மேலாகச் செல்லுபடியாகும் என்றால், சிங்கப்பூர் வேலைவாய்ப்பு நிறுவனத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய அதிகபட்ச முகவர் கட்டணம் உங்கள் **நிலையான மாதச் சம்பளத்தின் 2 மாதத்** தொகையாகும்.

உங்களது சிங்கப்பூர் வேலைவாய்ப்பு நிறுவனம் கட்டண வரம்புக்கு மேலாக முகவர் கட்டணங்களை உங்களிடமிருந்து பெற்றிருந்தால், அல்லது செலுத்தப்பட்ட கட்டணங்களுக்கான வகைப்படுத்தப்பட்ட ரசீதுகளை உங்களுக்கு வழங்கவில்லை என்றால், அல்லது உங்கள் வேலை நியமன ஒப்பந்தம் திடீரென்று முன்கூட்டியே நிறுத்தப்பட்ட நிலையில் உங்களுக்குப் பணத்தைத் திருப்பித் தரத் தவறியிருந்தால், தயவுசெய்து உடனடியாக மனிதவள அமைச்சிடம் புகார் அளிக்க 6438 5122 என்ற எண்ணை அழைக்கவும், அல்லது, 1500 பெண்டமியர் சாலை, சிங்கப்பூர் 339946 எனும் முகவரியில் உள்ள மனிதவள அமைச்சின் சேவை மையத்தை அணுகவும்.

### கட்டணத்தைத் திரும்பப் பெறுதல்

உங்கள் முதலாளி 6 மாதங்களுக்குள் உங்களை வேலையைவிட்டு நிறுத்தினால், நீங்கள் சிங்கப்பூர் வேலைவாய்ப்பு நிறுவனத்திற்குச் செலுத்திய முகவர் கட்டணத்தில் குறைந்தது 50% உங்களுக்குத் திருப்பித் தரப்படவேண்டும். இருப்பினும், வேலையில் இருந்து நிற்பது உங்கள் முடிவாக இருந்தால், நீங்கள் செலுத்திய பணத்தைத் திரும்பப் பெற முடியாது.

மேற்கூறிய விதிமுறைகள் சிங்கப்பூரில் இயங்கும் வேலைவாய்ப்பு நிறுவனங்களுக்கு மட்டுமே பொருந்தும்.

உங்கள் சொந்த நாட்டில் உள்ள உங்கள் வேலைவாய்ப்பு நிறுவனத்துடனான எந்தவொரு தகராறிலும் மனிதவள அமைச்சால் உங்களுக்கு உதவ முடியாது. உங்கள் சொந்த நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட்ட கட்டணங்களையும் மீட்டுத்தர இயலாது.

# வேலை நியமனச் சட்டங்கள்


வேலை அனுமதிச் சீட்டு வைத்திருப்பவர் என்ற முறையில், அதன் நிபந்தனைகளுக்கு நீங்கள் உட்படவேண்டும். எந்தவொரு வேலை அனுமதி நிபந்தனைகளையும் மீறுவது குற்றமாகும் அத்துடன் பின்வரும் விளைவுகளை நீங்கள் எதிர்நோக்குவீர்கள்:



உங்களுக்கு அபராதம் அல்லது சிறைத் தண்டனை விதிக்கப்படும்.




உங்கள் வேலை அனுமதிச் சீட்டு ரத்து செய்யப்படும்.



எதிர்காலத்தில் நீங்கள் சிங்கப்பூரில் வேலை செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டீர்கள்.


## (1) வேலை அனுமதிச் சீட்டின் செல்லுபடியாகும் காலத்தைச் சரிபார்த்தல்

உங்கள் வேலை அனுமதிச் சீட்டு காலாவதியாகும் முன் உங்கள் முதலாளி அதை ரத்து செய்தால், சிங்கப்பூரில் தொடர்ந்து பணியாற்ற நீங்கள் அனுமதிக்கப்பட மாட்டீர்கள். நீங்கள் SGWorkPass என்ற செயலியைப் பதிவிறக்குவதன் மூலம் அல்லது மனிதவள அமைச்சின் இணையத்தளத்தில் புகுபதிவு செய்வதன் மூலம் உங்கள் வேலை அனுமதிச் சீட்டின் செல்லுபடியாகும் காலகட்டத்தைச் சரிபார்க்கலாம்.



### a) SGWorkPass

*உங்கள் வேலை அனுமதிச் சீட்டு செல்லுபடியானதா என்பதைச் சரிபார்ப்பதற்கான இலவச செயலி*



உங்கள் வேலை அனுமதி அட்டையில் இருக்கும் QR குறியீட்டை ஸ்கேன் செய்வதற்கு SGWorkPass செயலியைப் பதிவிறக்கம் செய்து, வேலை அனுமதிச் சீட்டு செல்லுபடியாகும் காலத்தை உடனடியாகச் சரிபார்க்க முடியும். உங்கள் வேலை அனுமதி அட்டையில் QR குறியீடு இல்லை என்றால், உங்கள் அட்டையின் முன்புறத்தில் அச்சிடப்பட்ட தனிப்பட்ட அட்டை வரிசை எண்ணைப் பயன்படுத்தலாம்.

Download on the App Store


GET IT ON Google Play

**b) மனிதவள அமைச்சின் வலைத்தளம்**

நீங்கள் www.mom.gov.sg/check-wp இணையத்தளத்தில் புகுபதிவு செய்து, கீழ்க்காணும் படிநிலைகளைப் பின்பற்றலாம்.

1) தேர்ந்தெடுக்கவும்: *Enquire.*
2) தேர்ந்தெடுக்கவும்: *Work Permit Validity / Application Status.*
3) உங்கள் வேலை அனுமதி அட்டை எண்ணையும் உங்கள் பெயரையும் உள்ளிட்டு, Next என்பதைத் தட்டுக.

## (2) வேலை




- உங்கள் வேலை அனுமதி அட்டையில் குறிப்பிட்டுள்ள பணியில் மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாளிக்கு மட்டுமே நீங்கள் வேலை செய்யவேண்டும்.
  - உங்கள் முதலாளியால் அறிவுறுத்தப்பட்டாலும், வேறொரு பணியில் வேலை செய்ய உங்களுக்கு அனுமதி இல்லை.

- நீங்கள் கூடுதல் பணம் சம்பாதிக்க வேறு எந்த வணிகத்திலும் ஈடுபடவோ அல்லது உங்கள் சொந்தத் தொழிலைத் தொடங்கவோ கூடாது.

- நீங்கள் உங்களது அசல் வேலை அனுமதி அட்டையை எல்லா நேரங்களிலும் உங்களுடன் எடுத்துச் செல்லவேண்டும்; எந்தவொரு பொது அதிகாரியிடமும் திடீர் பரிசோதனைக்கு அதனைக் காட்ட வேண்டும்.

வேறொரு வேலையிலோ அல்லது வேறு முதலாளியிடமோ பணிபுரியும்படி கேட்கப்பட்டால், நீங்கள் உடனடியாக **6438 5122** என்ற எண்ணை அழைத்து மனிதவள அமைச்சிடம் புகார் அளிக்கவேண்டும், அல்லது 1500 பெண்டமியர் சாலை, சிங்கப்பூர் 339946 எனும் முகவரியில் உள்ள மனிதவள அமைச்சின் சேவை மையத்தை அணுகவேண்டும்.

## (3) நடத்தைகள்

- சிங்கப்பூரரை அல்லது சிங்கப்பூர் நிரந்தரவாசியைத் (சிங்கப்பூரில் அல்லது சிங்கப்பூருக்கு வெளியே) திருமணம் செய்துகொள்ள, வேலை அனுமதிப்பத்திர கட்டுப்பாட்டு அதிகாரியின் அனுமதி உங்களுக்குத் தேவை. உங்கள் வேலை அனுமதிச் சீட்டு செல்லாத பிறகும் இது பொருந்தும்.
- நீங்கள் சிங்கப்பூரரை அல்லது சிங்கப்பூர் நிரந்தரவாசியைத் திருமணம் செய்து கொண்டிருக்கும் பட்சத்தில், வேலை அனுமதிப்பத்திர கட்டுப்பாட்டு அதிகாரியின் அனுமதியைப் பெற்றிருந்தாலொழிய, நீங்கள் கர்ப்பமடையவோ சிங்கப்பூரில் குழந்தையைப் பெற்றெடுக்கவோ கூடாது. வேலை அனுமதிச் சீட்டு செல்லாத பிறகும் இது பொருந்தும்.

## 4) உரிமம் பெறாத வேலைவாய்ப்பு முகவராக இருக்க வேண்டாம்

- மனிதவள அமைச்சிடம் உரிமம் பெறாமல் பின்வரும் எந்தவொரு வேலைவாய்ப்பு நிறுவன நடவடிக்கைகளையும் நடத்துவது சட்டவிரோதமானது:

  (i) வேலை தேட உதவுவதாகக் கூறி குடும்பத்தினரிடமிருந்தோ அல்லது நண்பர்களிடமிருந்தோ பணம் அல்லது சலுகைகள் பெறுதல்,
  (ii) வேலை தேடித் தர உதவுவதற்காக எந்தவொரு வேலை விண்ணப்பதாரரிடமிருந்தும் எந்தவொரு தனிப்பட்ட ஆவணத்தையோ அல்லது சுயவிவரத் தொகுப்பையோ பெறுதல்,
  (iii) எந்தவொரு முதலாளி அல்லது வேலை விண்ணப்பதாரர் சார்பாகவும் வேலை அனுமதிப் பத்திர விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல், மற்றும் / அல்லது
  (iv) எந்தவொரு வேலை தேடுபவரையும் ஒரு முதலாளியிடம் வேலையில் சேர உதவுதல்

இந்தக் குற்றங்களில் எதைச் செய்தாலும் அதிகபட்சமாக $80,000 அபராதம் மற்றும்/அல்லது இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத்தண்டனை விதிக்கப்படும். உங்கள் வேலை அனுமதிச் சீட்டு ரத்து செய்யப்பட்டு, நீங்கள் சொந்த நாட்டிற்கு அனுப்பப்படுவீர்கள். நீங்கள் சிங்கப்பூரில் வேலை செய்ய அனுமதிக்கப்பட மாட்டீர்கள்.

## 5) உரிமம் பெறாத வேலைவாய்ப்பு முகவரை அல்லது நிறுவனத்தை நாடவேண்டாம்

- உரிமம் பெறாத எந்த வேலைவாய்ப்பு முகவரின் சேவையையும் பயன்படுத்துவது சட்டவிரோதமானது.
- உரிமம் பெறாத வேலைவாய்ப்பு முகவரை அணுகி வேலை தேட முயன்றால், வேலை கிடைக்காமல் போகலாம், அல்லது நீங்கள் செலுத்திய முகவர் கட்டணங்களை இழக்க நேரிடலாம். உரிமம் பெறாத வேலைவாய்ப்பு முகவரை நீங்கள் பயன்படுத்தும் ஒவ்வொரு முறையும் $5,000 வரை அபராதம் விதிக்கப்படும்.

**உங்கள் வேலைவாய்ப்பு முகவர் அல்லது நிறுவனம் மனிதவள அமைச்சிடம் (MOM) உரிமம் பெற்றிருக்கிறதா என்பதை எப்போதும் சரிபார்க்கவும்.**

- வேலைவாய்ப்பு நிறுவனத்தின் பணியாளர்களின் பதிவு அட்டையைக் காட்டச் சொல்லுங்கள் (கீழே உள்ள மாதிரியைப் பார்க்கவும்). அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள பெயரையும் பதிவு எண்ணையும் கவனத்தில் கொள்ளுங்கள்.
- நீங்கள் உரிமம் பெற்ற முகவை நிறுவனத்தைப் பயன்படுத்துகிறீர்களா என்பதை உறுதிப்படுத்த, www.mom.gov.sg/eadirectory இணையத்தளத்தில் உள்ள மனிதவள அமைச்சின் வேலைவாய்ப்பு நிறுவனப் பட்டியலில் உங்கள் முகவரின் பெயரைச் சரிபார்க்கவும்.




*உரிமம் பெற்ற வேலைவாய்ப்பு முகவரின் பதிவு அட்டையின் மாதிரிவடிவம்*


உரிமம் பெறாமல் வேலைவாய்ப்பு நிறுவன நடவடிக்கைகளில் ஈடுபடும் எந்த ஒருவரைப் பற்றியும், உடனடியாகப் புகார் அளிக்கவேண்டும். உங்கள் அடையாளம் ரகசியமாக வைத்துக் கொள்ளப்படும்.

### வேலை அனுமதி நிபந்தனைகளை மீறுவதற்கான தண்டனை

மேற்காணும் வேலை அனுமதி நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றை நீங்கள் மீறினால், உங்கள் வேலை அனுமதிச் சீட்டு ரத்து செய்யப்படும். அதோடு, நீங்கள் எதிர்காலத்தில் சிங்கப்பூரில் வேலை செய்ய அனுமதிக்கப்பட மாட்டீர்கள்.

# முதலாளியின் கடமைகள்

நீங்கள் வேலையில் இருக்கும்போது உங்கள் முதலாளி நிறைவேற்ற வேண்டிய சில பொறுப்புகள் உள்ளன. உங்களை வேலையில் அமர்த்துவதற்கு நிபந்தனையாக, உங்களிடமிருந்து பணம் கோரவோ பெறவோ உங்கள் முதலாளிக்கு அனுமதி இல்லை. பின்வரும் செலவினங்களுக்காக அவர் உங்களிடமிருந்து பணம் பெறவோ, உங்கள் சம்பளத்திலிருந்து பணம் கழிக்கவோ முடியாது:




வேலை அனுமதிச் சீட்டைப் புதுப்பித்தல்




பாதுகாப்புத் தொகை




மருத்துவக் காப்புறுதி




திருப்பி அனுப்பும் செலவுகள்




கட்டாயப் பயிற்சி




மருத்துவக் கட்டணங்கள்




தீர்வை செலுத்துதல்


எடுத்துக்காட்டாக, உங்கள் வேலை அனுமதிச் சீட்டு காலாவதியாகவிருந்தால், அதனைப் புதுப்பிக்க உங்கள் முதலாளி பணம் செலுத்தவேண்டும். புதுப்பிப்புக் கட்டணத்திற்காகப் பணம் செலுத்துமாறு உங்களிடம் கேட்கவோ அல்லது உங்கள் சம்பளத்திலிருந்து கழிக்கவோ முடியாது.

உங்கள் முதலாளி உங்கள் சம்பளத்திலிருந்து ஏதேனும் தொகையைக் கழித்தால், அந்தக் கழிப்பு எதற்கானது என்பதை உங்கள் முதலாளியிடம் கேட்டறியவும். மேலே பட்டியலிடப்பட்டுள்ள எந்தவொரு செலவிற்கும் தொகை கழிக்கப்பட்டு இருந்தால், **6438 5122** என்ற எண்ணை அழைத்து உடனடியாக மனிதவள அமைச்சிடம் புகார் அளிக்கவும் அல்லது 1500 பெண்டமியர் சாலை, சிங்கப்பூர் 339946 முகவரியில் உள்ள மனிதவள அமைச்சின் சேவை மையத்தை அணுகவும்.


## தங்குமிடம்

உங்கள் தங்குமிடம் தேவைப்படும் தரங்களைக் கொண்டிருப்பதையும், அதிக கூட்டமில்லாமல் இருப்பதையும் உங்கள் முதலாளி உறுதி செய்யவேண்டும். உங்கள் தங்குமிடம் மோசமான அல்லது பாதுகாப்பற்ற நிலையில் இருந்தால், **6438 5122** என்ற எண்ணை அழைத்து உடனடியாக மனிதவள அமைச்சிடம் புகார் அளிக்கவும் அல்லது 1500 பெண்டமியர் சாலை, சிங்கப்பூர் 339946 முகவரியில் உள்ள மனிதவள அமைச்சின் சேவை மையத்தை அணுகவும் .


மோசமான அல்லது பாதுகாப்பற்ற தங்குமிட நிலைமைகளின் எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:




இட நெருக்கடி



முறையான சுகாதார வசதிகள் அல்லது காற்றோட்டம் இல்லை



பூச்சிகளின் தொல்லை (எ.கா. எலிகள், கொசுக்கள், கரப்பான் பூச்சிகள்)



உங்கள் தங்குமிடத்திற்குள் சேதமடைந்த அல்லது சரிசெய்யப்படாத வசதிகள்

கூட்டுரிமை வீடுகள், கடைவீடுகள், தரை வீடுகள் போன்ற தனியார் குடியிருப்பு வளாகங்களில் நீங்கள் தங்கலாம். தனியார் குடியிருப்பு வளாகங்களில் அதிகபட்சம் 6 ஊழியர்கள் தங்க அனுமதிக்கப்படுகிறது. நீங்கள் தங்கும் இடத்தில் 6-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் தங்கியிருந்தால், உங்கள் முதலாளியுடன் பேசி நீங்கள் வெளியேறுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்.

## உங்கள் முகவரியைத் தெரிவித்தல்

மனிதவள அமைச்சிடம் உங்கள் முதலாளி பதிவு செய்துள்ள முகவரியில்தான் நீங்கள் தங்கியிருக்க வேண்டும். நீங்கள் சொந்தமாகத் தங்குமிடம் தேடிக்கொண்டால் அல்லது உங்கள் தங்குமிடத்தை மாற்றினால், உங்கள் சமீபத்திய குடியிருப்பு முகவரியை உங்கள் முதலாளியிடம் தெரிவிக்க வேண்டும். இதன்வழி, முதலாளி மனிதவள அமைச்சிடம் உங்கள் புதிய முகவரியைத் தெரிவிக்க முடியும். நீங்கள் அவ்வாறு செய்யத் தவறினால் உங்கள் வேலை அனுமதிச் சீட்டு ரத்து செய்யப்படும்.

## தங்குமிடத்தில் சமூக சுகாதாரத்தைக் கடைப்பிடிக்கவும்

நீங்கள் வாழும் இடத்தைச் சுத்தமாகவும் துப்புரவாகவும் வைத்திருங்கள். இதனால் நீங்கள் நோய்வாய்ப்படாமல் ஆரோக்கியமாக இருக்க முடியும்.

- உங்கள் படுக்கையில் மூட்டைப்பூச்சிகள் வராமல் தடுக்க, உங்கள் படுக்கையைச் சுத்தமாக வைத்திருங்கள்.
- கரப்பான் பூச்சிகள், எலிகள் போன்றவை வராமல் தடுக்க, நீங்கள் வாழும் சுற்றுச்சூழலைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள்.
- கொசுக்கள்  இனப்பெருக்கம் செய்வதைத் தடுக்க, தேங்கிய நீரை அகற்றிவிடுங்கள்.

## உங்கள் தங்குவிடுதியின் பொறுப்பாளரிடம் குடியிருப்புப் பிரச்சனைகளைப் பற்றி புகார் செய்யவும்

DormWatch app

*குடியிருப்புப் பிரச்சனைகளைப் பற்றி புகார் செய்ய உங்களுக்கான இலவச செயலி*

நீங்கள் ஒரு தங்குவிடுதியில் வசித்தால், குடியிருப்பில் உள்ள குறைபாடுகள், சேதமடைந்த வசதிகள் அல்லது உபகரணங்கள் குறித்து தங்குவிடுதியின் பொறுப்பாளரிடம் நேரடியாகப் புகார் செய்ய DormWatch என்ற செயலி உங்களுக்கு உதவுகிறது. பிரச்சனையின் நடப்பு நிலைமை பற்றி மனிதவள அமைச்சிடமும் தெரியப்படுத்தப்படும். அவசியமாயின், மனிதவள அமைச்சு தங்குவிடுதியைப் பரிசோதிக்கும். நீங்கள், கீழ்கண்ட QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம்.

Download on the App Store

GET IT ON Google Play

# வேலைவாய்ப்பு மோசடிகள்

வேலைவாய்ப்பு மோசடிகளுக்கு இலக்காகாமல் எச்சரிக்கையாக இருங்கள்:

- **செயல்படா நிறுவனம் / விடுவிக்கப்படும் ஊழியர் / சட்டவிரோத வேலை நியமனம்** - சிங்கப்பூருக்கு வந்தபின் உங்களுக்கு எந்த வேலையும் தரப்படவில்லை. ஏனெனில், உங்களுக்கு உறுதியளித்த அந்த முதலாளியோ அந்த வேலையோ உண்மையில் இல்லை, அல்லது சட்டவிரோதமாக நீங்களே சொந்தமாக வேலை தேடிக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

- **போலி ஆவணம்** – நீங்கள் சென்று படிக்காத பள்ளியிலிருந்து வாங்கப்பட்ட போலி கல்விச் சான்றிதழுடன் உங்கள் வேலை அனுமதிச் சீட்டுக்கு உங்கள் முதலாளி விண்ணப்பிக்கிறார்.

- **லஞ்சம் கொடுப்பது** - சிங்கப்பூரில் பணிபுரிய அல்லது உங்கள் வேலை அனுமதிப் பத்திரத்தைப் புதுப்பிக்க உங்கள் முதலாளிக்கு லஞ்சமாகப் பணம் கொடுத்தீர்கள்.

- **போலி சம்பள அறிவிப்புகள்** - உங்கள் முதலாளி உங்களுக்கு உண்மையிலேயே தருவதைவிட அதிகமான சம்பளத்தைக் கொள்கை ஒப்புதல் கடிதத்தில் (IPA) குறிப்பிட்டு மனிதவள அமைச்சிடம் சமர்ப்பித்திருக்கிறார்.

நீங்கள் ஏதேனும் மோசடிக்கு இலக்கானால், உடனடியாக**6438 5122** என்ற தொலைபேசி எண்ணை அழைத்து மனிதவள அமைச்சிடம் புகார் அளிக்கவும், அல்லது 1500 பெண்டமியர் சாலை, சிங்கப்பூர் 339946 எனும் முகவரியில் உள்ள மனிதவள அமைச்சின் சேவை மையத்தை அணுகவும்.

# பாதுகாப்பு

## வேலையிட பாதுகாப்பு

நீங்கள் கட்டுமானத்தில் பணிபுரிந்தால், கட்டுமானப் பாதுகாப்பு புத்தறிவுப் பாடத்திட்டத்தைப் படித்து முடிக்கவேண்டும். பணியில் இருக்கும்போது, பாடத்திட்டத்தில் நீங்கள் கற்றுக்கொண்டவற்றையும் உங்கள் முதலாளி அல்லது மேற்பார்வையாளர் வழங்கிய பாதுகாப்பு வழிமுறைகளையும் பின்பற்றவேண்டும்.

- நீங்கள் செய்யும் பணிக்குப் பொருத்தமான தனிநபர் பாதுகாப்புச் சாதனத்தை (PPE) (எ.கா. தலைக்கவசம், பாதுகாப்புக் கண்ணாடி, செவிப்புலன் பாதுகாப்புச் சாதனங்கள், கையுறைகள் மற்றும் பாதுகாப்புக் காலணிகள்) எப்போதும் அணியவேண்டும். அனைத்துப் பாதுகாப்புச் சாதனங்களையும் பழுதற்ற நிலையில் வைத்துக் கொள்ளவேண்டும்.

- உங்கள் பாதுகாப்பு வார்ப்பூட்டை அணிந்து, அதனை உறுதியான பொறுத்துமிடத்தில் மாட்டவும்.

- அபாயங்கள் விளைவிக்கும் வழிமுறைகளை அல்லது குறுக்குவழிகளை மேற்கொள்ளவோ, அல்லது பாதுகாப்பு விதிமுறைகளைப் புறக்கணிக்கவோ கூடாது.



**இந்த பொதுவான அபாயங்களைக் கவனத்தில் கொண்டு, உங்களைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுங்கள்:**




**உயரமான இடங்களில் வேலை பார்த்தல்**

- உயரத்தில் வேலை செய்யும்போது சரியாக நிற்கக்கூடிய தளங்களைப் பயன்படுத்தவேண்டும்.



- ஏணிகளைப் பயன்படுத்தும்போது எப்போதும் மூன்று இடங்களில் பிடிமானத்தை நிலைநாட்டவேண்டும்.



**மேலிருந்து விழக்கூடிய பொருட்கள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்**

- தொங்கவிடப்பட்டிருக்கும் பாரங்களில் இருந்து விலகி இருங்கள்.
- உபகரணங்களையும் பொருட்களையும் திறப்புகளுக்கு அருகில் வைக்கவோ அடுக்கவோ கூடாது.
- உங்கள் பாதுகாப்புத் தலைக்கவசத்தையும் எஃகு காலணிகளையும் அணிய வேண்டும்.




**கீழே விழுவதைத் தடுத்தல்**

- பணியிடத்தை ஈரமில்லாமல் உலர்வாகவும், சுத்தமாகவும், சிதறல்கள் இல்லாமலும், கம்பிகள் போன்ற பொருட்களில் தடுக்கி விழுந்துவிடாமலும் வைத்துக் கொள்ளுங்கள்.
- படிக்கட்டுகளில் ஏறும்பொழுது கைப்பிடிகளைப் பிடித்துக் கொள்ளுங்கள்.
- வழுக்கி விழுவதைத் தடுக்கும் பாதுகாப்புக் காலணிகளை அணிந்து கொள்ளுங்கள்.




**மின்சார அபாயங்கள்**

- பழுதடைந்த மின் உபகரணங்களையோ அல்லது பழுதடைந்த மின்னிணைப்பு பொறிகளையோ பயன்படுத்த வேண்டாம்.
- வேலை இடத்தை உலர்வாகவும் சுத்தமாகவும் வைத்துக் கொள்ளுங்கள்.




- அனைத்து இடங்களும் நன்றாக உலர்ந்திருக்கும் நிலையில் மட்டுமே மின் வேலைகளை மேற்கொள்ளுங்கள்.
- ரப்பர் கையுறைகளையும் பாதுகாப்புக் காலணிகளையும் அணிந்து கொள்ளுங்கள்.

- நீட்டிப்பு கம்பிவடங்களையும் மின் சாதனங்களையும் பயன்படுத்தும் போது, 'பாதுகாப்பு அடையாளக் குறியீடு' உள்ளவற்றை மட்டுமே பயன்படுத்தவும் (கீழே உள்ள சின்னத்தைப் பார்க்கவும்).






SAFETY MARK
1 2 3 4 5 6 - 0 0

**குறுகலான இடங்கள்**

- குறுகலான இடத்திற்குள் நுழைவதற்கு முன், எப்போதும் எரிவாயுச் சோதனை செய்யுங்கள்.
- குறுகலான இடத்திற்குள் நுழைவதற்கு முன், பாதுகாப்புச் சாதனங்களை (எ.கா. சுவாசக் கருவி, முழு உடல் கவசம் மற்றும் மீட்டெடுப்புக் கயிறு) அணிந்து கொள்ளுங்கள்.

**தீ அபாயங்கள்**

- நெருப்பு பற்றக்கூடிய அபாயம் உள்ள சூடான வேலைகளைச் செய்வதற்கு முன் கரைப்பான்கள், காற்று அழுத்தப்பட்ட தொட்டிகள், மரத்தூள் போன்ற எரியக்கூடிய பொருட்கள் அருகில் இருந்தால் அகற்றி விடுங்கள்.
- எரியக்கூடிய அபாயம் உள்ள பொருட்களை மூடியுள்ள கொள்கலன்களில் வைத்து, நன்கு காற்றோட்டமான இடங்களில் பத்திரப்படுத்தி வைக்கவும்.


 

**வேலையிடத்தில் வாகனம் ஓட்டுதல்**

- வாகனங்கள் வருவதைக் கவனிக்கவும். பணியிடத்தில் நடக்கும்போது நடைபாதைகளில் செல்லவும்.
- நீங்கள் மயக்கத்தை ஏற்படுத்தும் மருந்தை உட்கொண்டால் வாகனம் ஓட்டுவதைத் தவிர்க்கவும்.
- நீங்கள் நீண்ட நேரம் வாகனம் ஓட்டினால், கைகால்களை நீட்டி ஓய்வெடுப்பதற்கு சிறு சிறு இடைவேளைகள் எடுத்துக்கொள்ளவும்.
- வாகனத்தைப் பின்னோக்கிச் செலுத்துவதற்கு முன், மறைவான இடங்களை வாகனக் கண்ணாடியில் சரிபார்க்கவும்.
- பணியிடத்திற்கு அருகே வாகனங்கள் வராமல் தடுக்க, உங்கள் பணியிடத்தைச் சுற்றி போக்குவரத்துக் கூம்புகளை வைக்கவும்.

# மருத்துவ சிகிச்சை நாடுதல்

நீங்கள் நோய்வாய்ப்பட்டிருந்து, மருத்துவரிடம் செல்ல வேண்டியிருந்தால், உங்கள் முதலாளியிடம் தெரியப்படுத்துங்கள். நீங்கள் மருத்துவரை இந்த இடங்களில் காணலாம்:



உங்கள் பணியிடத்திற்கு அல்லது தங்கும் இடத்துக்கு அருகிலுள்ள மனிதவள அமைச்சு அங்கீகரித்த **மருத்துவ மையங்களில்**

OR



மனிதவள அமைச்சால் நியமிக்கப்பட்ட **பொது மருத்துவ (ஜி.பி.) மருந்தகங்களில்**



**FWMOMCare** செயலியின் வழியாக
**தொலை மருத்துவ மருத்துவரிடம்**
(இணையம் வழியிலான ஆலோசனை மட்டுமே)


நீங்கள் மருத்துவரைப் பார்ப்பதற்கு உங்கள் முதலாளி உங்களை அனுமதிக்க வேண்டும். உங்கள் மருத்துவக் கட்டணங்களையும் அவர் செலுத்தவேண்டும். உங்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு முன் உங்கள் முதலாளியிடமிருந்து கடிதம் தேவை என்று மருந்தகம் கேட்டால், அவர் அதை வழங்க வேண்டும்.

உங்கள் முதலாளியிடம் தருவதற்காக, மருத்துவச் சான்றிதழ் மற்றும் மருந்தகத்தில் பணம் செலுத்தியதற்கான ரசீது ஆகியவற்றைத் தயவுசெய்து மறக்காமல் பெற்றுக்கொள்ளுங்கள். உங்கள் சொந்தப் பதிவுகளுக்காக, மருத்துவச் சான்றிதழ் மற்றும் ரசீது ஆகியவற்றைப் புகைப்படம் எடுத்து நீங்கள் வைத்துக் கொள்ளவேண்டும்.

உங்கள் மருத்துவச் சிகிச்சைக்கான கட்டணத்தை வழங்கவோ அல்லது செலுத்தவோ உங்கள் முதலாளி மறுத்துவிட்டால், **6438 5122** என்ற தொலைபேசி எண்ணை அழைத்து உடனடியாக மனிதவள அமைச்சிடம் புகார் அளிக்கவும், அல்லது 1500 பெண்டமியர் சாலை, சிங்கப்பூர் 339946 எனும் முகவரியில் உள்ள மனிதவள அமைச்சின் சேவை மையத்தை அணுகவும். அனைத்துத் தகவல்களும் கண்டிப்பாக ரகசியமாக வைத்திருக்கப்படும்.

# வேலையிட காயம்

உங்கள் முதலாளியே தன்னிடம் வேலை செய்யும் அனைத்து ஊழியர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வுக்குப் பொறுப்பாவார்.



## நீங்கள் வேலை செய்யும்போது காயமடைந்தால் என்ன செய்வது?

1. உங்கள் காயத்தை உங்கள் மேற்பார்வையாளரிடம் அல்லது முதலாளியிடம் தெரிவித்து, விரைவாக சிகிச்சை பெறவும். நீங்கள், மருத்துவர் / பல் மருத்துவரிடமிருந்து ஏதேனும் மருத்துவமனை விடுப்பு / மருத்துவ விடுப்பு அல்லது இலகுவான பணி செய்யும்படி அறிவுறுத்தல் ஆகியவற்றைப் பெற்றால், ஒரு சம்பவ அறிக்கையை மனிதவள அமைச்சிடம் சமர்ப்பிக்கும்படி உங்கள் மேற்பார்வையாளரிடம் அல்லது முதலாளியிடம் தெரிவிக்கவும்.

2. நீங்கள் பணியில் காயமடைந்தபோது உங்கள் முதலாளி ஒரு சம்பவ அறிக்கையைச் சமர்ப்பிக்கவில்லை என்றால், தயவுசெய்து மனிதவள அமைச்சுக்குத் தெரிவிக்கவும். நீங்கள், 6438 5122 என்ற எண்ணில் மனிதவள அமைச்சுக்குத் தகவல் தெரிவிக்கலாம் அல்லது மனிதவள அமைச்சின் சேவை மையத்திற்கு (1500 பெண்டமியர் சாலை, சிங்கப்பூர் 339946) நேரில் சென்று, ஒரு மனிதவள அமைச்சு அதிகாரியுடன் பேசலாம். உங்கள் தொடர்பு விவரங்கள், உங்கள் முதலாளியின் பெயர் மற்றும் விபத்து நடந்த தேதி ஆகியவற்றை மட்டுமே நீங்கள் மனிதவள அமைச்சிடம் கொடுக்க வேண்டும். உங்களால் ஆங்கிலத்தில் பேச முடியாவிட்டாலும் மனித வள அமைச்சால் உங்களுக்கு உதவ முடியும்.




3. வேலையிட விபத்து குறித்து உங்களுக்கும் உங்கள் மேற்பார்வையாளருக்கும் / முதலாளிக்கும் இடையிலான தகவல் பரிமாற்றப் பதிவுகளைப் (எ.கா. உங்கள் வாட்ஸ்ஆப் மற்றும் குறுஞ்செய்திகள் போன்றவை) பத்திரமாக வைத்துக்கொள்ளுங்கள்.



4. நீங்கள் காயமடைந்த இடத்தின் புகைப்படங்களையும், உங்கள் காயத்திற்குக் காரணமான கருவிகள் அல்லது இயந்திரங்களையும் புகைப்படம் எடுக்கும்படி உங்கள் நண்பரிடம் சொல்லுங்கள். எடுத்த புகைப்படங்களை மருத்துவரிடம் காட்டுங்கள்.



5. உங்களுக்கு ஒரு மருத்துவச் சந்திப்புக்கு நேரம் தரப்பட்டிருந்தால், தயவுசெய்து சந்திப்பில் கலந்து கொள்ளுங்கள்; அதற்குப் பதிலாக மற்ற மருத்துவர்களிடம் செல்ல வேண்டாம். கொடுக்கப்பட்ட மருத்துவச் சந்திப்புகளில் கலந்து கொள்ளத் தவறினால், உங்கள் பணிக்காலக் காய இழப்பீட்டுக் கோரிக்கை நிறுத்திவைக்கப்படும்.




6. உங்களுக்கு ஏற்பட்ட காயங்களுடன் தொடர்புடைய ஆவணங்களின் நகலை (எ.கா. மருத்துவச் சான்றிதழ்கள், மருத்துவ ரசீதுகள்) நீங்கள் பத்திரமாக வைத்துக்கொண்டு, அவற்றின் அசல்களை உங்கள் முதலாளியிடம் ஒப்படைக்கவும்.



7. காப்பீட்டாளர் அல்லது மனிதவள அமைச்சு இழப்பீட்டுத் தொகையைக் கணக்கிட்டு உங்களுக்கும் உங்கள் முதலாளிக்கும் ஒரு அறிவிப்பை வெளியிடும். அந்தத் தொகைக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால், அறிவிப்பு பெறப்பட்ட தேதியிலிருந்து 21 நாட்களுக்குள் உங்கள் முதலாளி / காப்பீட்டாளர் உங்களுக்குப் பணத்தைச் செலுத்தவேண்டும். உங்கள் இழப்பீட்டு கோரிக்கையை உங்கள் முதலாளி கையாளுவார்; பின்பு மனிதவள அமைச்சிடம் அவர் தெரிவிப்பார்.

## கோரிக்கை தாக்கல் செய்தல்

- நீங்கள் ஒரு கோரிக்கையை தாக்கல் செய்ய தேவையில்லை. ஏனெனில் உங்கள் முதலாளி சம்பவ அறிக்கையை மனிதவள அமைச்சுக்கு சமர்ப்பிக்கும்போது உங்கள் வழக்கின் செயலாக்கம் தாமாகவே தொடங்கும்.
- கோரிக்கை செயலாக்கப்படுத்தப்படும்போது நீங்கள் உங்கள் முதலாளியோடு தொடர்ந்து இருக்கவேண்டும். ஏனெனில், அவர் உங்களுக்கு உணவு, தங்குமிடம் ஆகியவற்றைத் தொடர்ந்து வழங்கவேண்டும். உங்கள் முதலாளி உங்களைச் சொந்த நாட்டுக்குத் திரும்பும்படி கட்டாயப்படுத்தி, விபத்தைத் தெரிவிக்காதிருந்தால், உடனடியாக 6438 5122 என்ற எண்ணில் மனிதவள அமைச்சை அழைக்கவும்.
- உங்கள் முதலாளி உங்களை விமான நிலையத்திற்கு அனுப்பி, சிங்கப்பூரை விட்டு வெளியேறும்படி கட்டாயப்படுத்தினால், விமான நிலையத்தின் குடிநுழைவு முகப்பில் உள்ள அதிகாரிகளிடம் உதவி பெறலாம்.

**உங்களுக்குத் தெரியுமா?**

WICA சட்டத்தின்கீழ் உங்கள் கோரிக்கைக்கு உதவி புரிய உங்களுக்கு வழக்கறிஞர் தேவையில்லை. இழப்பீட்டுத் தொகை ஒரு நிலையான கணக்கீட்டு முறையின் அடிப்படையிலானது. WICA சட்டத்தின்கீழ் உள்ள கோரிக்கைகளில் 75% க்கும் அதிகமானவை விபத்து நடந்த நாளிலிருந்து எட்டு மாதங்களுக்குள் தீர்க்கப்படுகின்றன.

### நான் என்ன கோர முடியும், தொகை எவ்வளவு?

WICA சட்டத்தின்கீழ், நீங்கள் சிங்கப்பூரில் பதிவுசெய்த மருத்துவரை அல்லது பல் மருத்துவரைச் சந்தித்தால் மட்டுமே பின்வரும் வகையிலான இழப்பீடுகளைக் கோர முடியும்.

| இழப்பீட்டு வகை | அது என்ன? |
|---|---|
| மருத்துவச் செலவுகள் | உங்கள் மருத்துவக் கட்டணங்கள் மற்றும் பணிக்காலக் காயத்திற்காகச் செலுத்திய பிற கட்டணங்கள் எ.கா. பணிக்காலக் காய மதிப்பீட்டு அறிக்கைகளுக்கான கட்டணம். |
| மருத்துவ விடுப்புக்கான ஊதியங்கள் | • வேலை விபத்து காரணமாக ஏதேனும் மருத்துவமனை விடுப்பு / மருத்துவ விடுப்பு அல்லது இலேசான வேலை ஆகியவை வழங்கப்பட்டால்.<br>• நீங்கள் வழக்கமாக வேலை செய்யும் நாட்களுக்கு (வேலை நாட்கள்). ஆனால், ஓய்வு நாட்களுக்கும் பொது விடுமுறை நாட்களுக்கும் அல்ல. |
| மொத்தத் தொகை இழப்பீடு | • நிரந்தர இயலாமை - ஒரு காயம் அல்லது மருத்துவ நிலை நீங்கள் வேலை செய்யும் திறனில் நிரந்தர இயலாமையை ஏற்படுத்தி இருந்தால்<br>• மரணம் - ஒரு விபத்து மரணத்தை ஏற்படுத்தும் போது. |

உங்கள் பணிக்காலக் காய இழப்பீட்டுக் கோரிக்கை தொடர்பில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், நீங்கள் **6438 5122** என்ற எண்ணை அழைக்கலாம் அல்லது 1500 பெண்டமியர் சாலை, சிங்கப்பூர் 339946 எனும் முகவரியில் அமைந்துள்ள மனிதவள அமைச்சை அணுகலாம்.

## பொய்யான கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டாம்

பணிக்காலக் காய இழப்பீடு பெறுவதற்காகப் பொய்யான கோரிக்கையைச் சமர்ப்பிக்கவோ வேலையில் செய்யும்போது நீங்கள் காயமடைந்ததாகப் பொய்யான தகவல்களை அளிக்கவோ கூடாது. அவ்வாறு செய்யும் ஊழியர்களுக்கு அபராதம் மற்றும்/அல்லது சிறைத்தண்டனை விதிக்கப்படும். அதோடு, அவர்கள் சிங்கப்பூரில் வேலை செய்ய திரும்பி வர முடியாது.

## WICA சட்டம் vs பொதுச் சட்டம்

காயமடைந்த பெரும்பாலான ஊழியர்கள் WICA சட்டத்தின்கீழ் நியாயமான மற்றும் உரிய நேரத்தில் இழப்பீடு பெறுகிறார்கள். மனித வள அமைச்சிடமிருந்து உங்கள் WICA கோரிக்கையைத் திரும்பப் பெற்று, அதற்குப் பதிலாக, பொது சட்டத்தின் கீழ் ஒரு கோரிக்கையைத் தாக்கல் செய்ய ஒரு வழக்கறிஞரை ஈடுபடுத்த உங்களுக்கு உரிமை உண்டு. இருப்பினும், பொதுச் சட்டத்தின் கீழ் கோரிக்கைகளை நிறைவேற்ற, பெரும்பாலும் அதிக நேரம் எடுக்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். மேலும், உங்கள் முதலாளியின் அலட்சியத்தால்தான் காயம் ஏற்பட்டது என்பதை நீங்கள் நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டும். வழக்கறிஞர்களிடமிருந்து தரகுப்பணம் பெறுவதற்காக, WICA கோரிக்கைகளைத் திரும்பப் பெறுமாறு ஊழியர்களைச் சிலர் தவறாக வழிநடத்துவதாக எங்களுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. எனவே, உங்கள் தெரிவுகளைக் கவனமாகப் பரிசீலியுங்கள்.

# சிங்கப்பூரின் சட்டங்கள்

**இங்கு பணிபுரியும்போது, நீங்கள் சிங்கப்பூரின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். இல்லையெனில், நீங்கள் தண்டனைகளை எதிர்நோக்குவீர்கள். உங்கள் வேலை அனுமதிச் சீட்டு ரத்து செய்யப்படும். அதோடு, எதிர்காலத்தில் நீங்கள் சிங்கப்பூருக்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டீர்கள்.**

| குற்றங்கள் | தண்டனைகள் |
|---|---|
| குப்பை போடுதல் | • குற்றம் புரிபவர்களுக்கு $2,000 வரை அபராதமும், மீண்டும் குற்றம் புரிபவர்களுக்குக் கூடுதலான அபராதமும் விதிக்கப்படும். |
| தண்ணீர் விரயம் | • 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது $50,000 வரை அபராதம் அல்லது இரண்டும்.<br>• தொடர்ந்து குற்றம் புரிந்தால், நாளுக்கு $1,000 அபராதம் அல்லது அதன் ஒரு பகுதி விதிக்கப்படும். |
| பொது இடங்களில் சிறுநீர் கழித்தல் | • $1,000 வரை அபராதம் விதிக்கப்படும், மீண்டும் குற்றம் புரிபவர்களுக்கு அபராதத்தொகை கூட்டப்படும். |
| சாலையைப் பாதுகாப்பற்ற முறையில் கடப்பது | • 3 மாதங்கள் வரை சிறைத்தண்டனை அல்லது $1,000 வரை அபராதம் அல்லது இரண்டும். மீண்டும் குற்றம் புரிபவர்களுக்கு அபராதத்தொகை கூட்டப்படும். |
| பொது இடங்களில் குடிபோதை | • 1 மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது $1,000 வரை அபராதம்.<br>• மதுபானக் கட்டுப்பாட்டு மண்டலத்திற்குள் கண்டறியப்படும் குற்றவாளிகளுக்கு, 1.5 மடங்குக்கு மேற்போகாத தண்டனை விதிக்கப்படும். |
| பொது இடங்களில் சட்டவிரோதமாக மது அருந்துதல் | • $1,000க்கு மிகாத அபராதம்.<br>• மதுபானக் கட்டுப்பாட்டு மண்டலத்திற்குள் கண்டறியப்படும் குற்றவாளிகளுக்கு, 1.5 மடங்குக்கு மேற்போகாத தண்டனை விதிக்கப்படும். |
| காவல்துறையிடம் பொய்யான புகார் அளித்தல் | • 6 மாதங்கள் வரை சிறைத்தண்டனை அல்லது $5,000 வரை அபராதம் அல்லது இரண்டும். |
| திருட்டு (திருடுவது அல்லது கடைத் திருட்டு) | • சிறிய திருட்டுக்கு 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது அபராதம், அல்லது இரண்டும். |

| | |
|---|---|
| **வீடுபுகுந்து திருடுதல்** | • 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும்.<br>• இரவில் வீடுபுகுந்து திருடினால் 14 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும். |
| **கள்ளச் சிகரெட்டுகளை வாங்குவது அல்லது விற்பது** | • செலுத்தாத வரியின் 40 மடங்கு வரை அபராதம், மற்றும்/அல்லது 6 ஆண்டுகள் வரை சிறை.<br>• முதல்முறை குற்றவாளிகளுக்கும் மீண்டும் குற்றம் புரியும் குற்றவாளிகளுக்கும் குறைந்தபட்ச நீதிமன்ற அபராதம் முறையே $2,000 மற்றும் $4,000 ஆகும். |
| **அனுமதிக்கப்பட்ட நாட்களைத்தாண்டியும் தங்குதல்** | • 90 நாட்கள் அல்லது அதற்கும் குறைவான காலத்திற்கு அனுமதியின்றி தங்குவோருக்கு 6 மாதங்கள் வரை சிறைத்தண்டனை, அல்லது $4,000 வரை அபராதம் அல்லது இரண்டும்.<br>• 90 நாட்களுக்குமேல் அனுமதியின்றி தங்குவோருக்குக் குறைந்தபட்சம் 3 பிரம்படிகள் (அல்லது  பிரம்படிக்குக் தகுதியற்றவராக இருந்தால், $6,000 அபராதம்) மற்றும்/அல்லது 6 மாதங்கள் வரை சிறைத்தண்டனை. |
| **குற்றவியல் மிரட்டல்** | • 2 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும்.<br>• மரணம் அல்லது படுகாயம் ஏற்படுத்துவதற்காக, அல்லது நெருப்பால் சொத்துகளை அழிப்பதற்காக மிரட்டல் விடுத்திருந்தால் 7 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட சிறைத்தண்டனை, அல்லது அபராதம் அல்லது இரண்டும். |
| **காயம் ஏற்படுத்துதல்** | • 2 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது $5,000 வரை அபராதம் அல்லது இரண்டும்.<br>• படுகாயம் ஏற்படுத்தியிருந்தால், 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையுடன், அபராதம் அல்லது பிரம்படி விதிக்கப்படும். |
| **சட்டவிரோதமாகக் கூடுதல் அல்லது ஊர்வலம் செல்தல்** | • 2 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை, அல்லது அபராதம் அல்லது இரண்டும். |
| **கலவரம்** | • கலவரத்துக்கு 7 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை மற்றும் பிரம்படிகள்<br>• ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டால் 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை மற்றும் பிரம்படிகள் |
| **மானபங்கம் செய்தல்** | • 2 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை, அபராதம், பிரம்படிகள் அல்லது அவற்றின் ஏதேனும் சேர்க்கை<br>• பாதிக்கப்பட்டவர் 14 வயதுக்குக் குறைவானவர் என்றால், பிரம்படி, அபராதம் மற்றும்/அல்லது  5 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை. |

| | |
|---|---|
| **கொள்ளையடித்தல்** | • 2 முதல் 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை மற்றும் குறைந்தபட்சம் 6 பிரம்படிகள்.<br>• கொள்ளைச் சம்பவம் இரவில் நடந்திருந்தால் 3 முதல் 14 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை மற்றும் குறைந்தபட்சம் 12 பிரம்படிகள். |
| **போதைப்பொருள் கடத்தல் மற்றும் உட்கொள்ளல்** | • போதைப்பொருள் கடத்தலுக்கு 30 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை மற்றும் 15 பிரம்படிகள், அல்லது மரண தண்டனை கூட விதிக்கப்படலாம்.<br>• போதைப்பொருள் உட்கொண்டால் அல்லது வைத்திருந்தால் 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது $20,000 அபராதம், அல்லது இரண்டும். |
| **கொலை** | • கட்டாய மரண தண்டனை (மரணத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் செய்த கொலைக்கு).<br>• மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை (பிற வகை கொலைகளுக்கு). |

### சிங்கப்பூரில் பொது ஒழுங்குமுறை

சட்டவிரோதக் கூட்டம் அல்லது ஊர்வலம் நடத்துவது அல்லது அவற்றில் பங்கேற்பது குற்றமாகும். எந்தவொரு நபரின் அல்லது நபர்களின் குழுக்களுக்கோ அல்லது எந்தவொரு அரசாங்கத்தின் கருத்துகளுக்கும் செயல்களுக்கும் ஆதரவையோ எதிர்ப்பையோ காட்ட நீங்கள் ஒரு பொது இடத்தில் பெரிய குழுக்களாக ஒன்றுகூடக்கூடாது. நீங்கள் பிடிபட்டால், உங்கள் வேலை அனுமதிச் சீட்டு ரத்து செய்யப்படும்.

### லஞ்சம்


சிங்கப்பூர் லஞ்சத்தை முற்றிலும் சகித்துக்கொள்ளாத அணுகுமுறையைப் பின்பற்றுகிறது. சலுகைகளுக்கு ஈடாக லஞ்சம் கொடுப்பது கடுமையான குற்றமாகும். இதுபோன்ற செயல்களில் ஈடுபடும் எந்தவொரு தரப்பினருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்க லஞ்ச ஊழல் புலனாய்வுப் பிரிவு (CPIB) தயங்காது. லஞ்சம் பல வடிவங்களில் இருக்கலாம்:


பணம்


கடன்கள்


அன்பளிப்புகள்


வாக்குறுதிகள்


பாலுறவு

லஞ்சம் கொடுக்க அல்லது பெற முயற்சிப்பது ஒரு குற்றமாகும்.

**லஞ்சத்திற்கு எதிரான தண்டனை**
5 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது $100,000 வரை அபராதம் அல்லது இரண்டும். உங்கள் வேலை அனுமதிச் சீட்டு ரத்து செய்யப்படலாம். எதிர்காலத்தில் நீங்கள் சிங்கப்பூருக்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டீர்கள்.

**லஞ்சத்திற்கு எதிராகப் புகாரளித்தல்**
உங்களுக்கு லஞ்சம் கொடுக்க அல்லது உங்களிடமிருந்து லஞ்சம் கேட்டு யாரேனும் உங்களை அணுகினால், பின்வரும் வழிகளில் இந்த விஷயத்தை நீங்கள் CPIB -யிடம் தெரிவிக்கலாம்:

1) எண் 2 லெங்கொக் பாரு, சிங்கப்பூர் 159047 என்ற முகவரியில் அமைந்திருக்கும் CPIB அலுவலகத்திற்கு அல்லது 247 விட்லி ரோடு, சிங்கப்பூர் 297830 என்ற முகவரியில் அமைந்திருக்கும் ஊழல் புகாரளிப்பு மற்றும் மரபுடைமை நிலையத்திற்கு நேரடியாகச் செல்லலாம்
2) 24 மணி நேர நேரடி தொலைபேசி சேவையை 1800-376-0000 என்ற எண்ணில் அழைக்கலாம்
3) report@cpib.gov.sg முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்

**SGSecure: விழிப்பாக இருங்கள். ஒற்றுமையாக இருங்கள். தைரியமாக இருங்கள்.**
பயங்கரவாதத்திற்குத் துணைபோகும் எந்தவிதமான ஆதரவையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது. பயங்கரவாதத்திற்கு ஆதரவான எந்தவொரு செயலிலும் ஈடுபடுவோர், எந்த தேசத்தைச் சேர்ந்தவர் என்பதைப் பொருட்படுத்தாமல், அவர்களுக்கு எதிராக நாங்கள் உறுதியான, தீர்க்கமான நடவடிக்கை எடுப்போம்.

பயங்கரவாதம் தொடர்பான நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் அல்லது அவற்றில் பங்கேற்கும் எந்தவொரு நபரையும் நீங்கள் கண்டால், **1800-255-0000** என்ற எண்ணில் காவல்துறைக்குத் தகவல் அளிக்கவும்.

உங்கள் தங்கும் விடுதிகள் மற்றும் பணியிடங்களுக்கு அருகில் சந்தேகத்திற்கு இடமான நடத்தைகள் மற்றும் கவனிக்கப்படாத அல்லது கைவிடப்பட்ட பொருட்கள் குறித்து விழிப்புடன் இருங்கள்.

நெருக்கடிகளின்போது முக்கியமான எச்சரிக்கைகளைப் பெற **SGSecure** என்ற செயலியைப் பதிவிறக்க QR குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள். ஏதேனும் தவறான சம்பவங்கள் நடந்தால் புகாரளிக்கவும், அதிகாரிகளிடமிருந்து பயனுள்ள தகவல்களைப் பதிவிறக்கம் செய்யவும் இந்தச் செயலியை நீங்கள் பயன்படுத்தலாம்.

Download on the App Store

GET IT ON Google Play

# பண விவகாரங்கள்


## நல்ல நிதி பழக்க வழக்கங்கள்

நீங்கள் ஏன் சிங்கப்பூருக்கு வேலைக்கு வந்தீர்கள் என்பதை நினைவில் கொள்க. உங்கள் குடும்பத்திற்காக வீட்டிற்கும் அனுப்பிவைக்க பணம் சம்பாதிப்பதற்குத்தான். அதனால், உங்கள் பணத்தை நிர்வகிப்பது மிகவும் முக்கியம். அப்பொழுதுதான் நீங்கள் செலவழிக்கவும் சேமிக்கவும் போதுமான தொகை உங்களிடம் இருக்கும்.

1. **வரவு செலவுத் திட்டம் போடுவது எப்படி என்பதை அறிக**
   வரவு செலவுத் திட்டம் என்றால் உங்கள் பணத்தை வைத்து என்ன செய்வது என்று திட்டமிடுவது. உங்கள் தேவைகள் என்ன என்பதைப் புரிந்து கொள்ளுங்கள், எ.கா. உங்கள் குடும்பத்தின் சுகாதார அல்லது கல்விச் செலவுகளுக்குப் பணம் ஒதுக்குங்கள். பின்னர் எவ்வளவு சேமிக்க வேண்டும் என்று திட்டமிடுங்கள். உங்கள் தினசரித் தேவைகளுக்கும் பணத்தை ஒதுக்கி வைக்க வேண்டும்.

2. **உங்கள் சேமிப்பைப் பெருக்குங்கள்**
   மாதந்தோறும் ஒரு தொகையை ஒதுக்கி, அதை உங்கள் வங்கிக் கணக்கில் சேமித்து வையுங்கள். இந்தப் பணத்தைக்கொண்டு நீங்கள் உங்கள் சொந்த ஊரில் என்ன செய்ய முடியும் என்று திட்டமிடுங்கள், எ.கா. ஒரு புதிய வீட்டைக் கட்டலாம், ஒரு வியாபாரத்தைத் தொடங்கலாம்.

3. **தேவையற்ற செலவுகளைக் குறைத்திடுங்கள்**
   ஒரு பொருளை வாங்குவதற்கு முன், அது உங்களுக்கு உண்மையில் தேவைதானா என்பதை நீங்களே உங்களிடம் கேட்டுக்கொள்ளுங்கள்.



## பணத்தைப் பாதுகாப்பான முறையில் அனுப்புங்கள்

- **தானியங்கி பணம் அனுப்பும் இயத்திரம்**
  உங்கள் தங்குவிடுதிகளில் அல்லது பொழுதுபோக்கு மையத்தில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட பணம் அனுப்பும் இயந்திரங்களைப் பயன்படுத்தவும். ஹவாலா அல்லது உண்டியல் தரகர்கள் போன்ற உரிமம் பெறாத பணம் அனுப்பும் முகவர்கள் உங்கள் பணத்துடன் ஓடிவிடக்கூடும்.

- **இணையம் வழி பணம் அனுப்பும் வலைத்தளங்கள் மற்றும் கைபேசிச் செயலிகள்**
  உரிமம் பெற்ற இணையம் வழி பணம் அனுப்பும் வலைத்தளங்கள் மற்றும் கைபேசிச் செயலிகளை மட்டுமே பயன்படுத்தவும். வாட்ஸ்அப் அல்லது உடனடிச் செய்தி தளங்கள் மூலம் ஒருபோதும் பணத்தை வீட்டிற்கு அனுப்ப வேண்டாம். சிங்கப்பூர் நாணய வாரியத்தின் இணையதளத்தில் **https://eservices.mas.gov.sg/fid** அவர்களின் பெயர் இடம்பெற்றுள்ளதா என்று தேடுவதன் மூலம் பணம் அனுப்பும் நிறுவனம் உரிமம் பெற்றிருக்கிறதா என்று சோதிக்கவும்.

- **உங்கள் முதலாளியிடம் உதவி கேட்கவும்**
  நீங்கள் சொந்தமாக வீட்டிற்குப் பணம் அனுப்ப முடியாவிட்டால், உங்கள் முதலாளியிடம் உதவி கேளுங்கள். வெற்றிகரமாகப் பணம் அனுப்பிய பரிவர்த்தனைக்கான ஆதாரத்தை உங்கள் முதலாளி உங்களுக்குக் காட்ட வேண்டும்.

  நெரிசலான பொது இடங்களில் அதிகமான ரொக்கப் பணத்தை எடுத்துச் செல்வது பாதுகாப்பானது அல்ல.

  ஹவாலா அல்லது உண்டியல் தரகர்கள் போன்ற உரிமம் பெறாத பணம் அனுப்பும் முகவர்களை நாடாதீர்கள். ஏனெனில் அவர்கள் உங்கள் பணத்துடன் ஓடிவிடக்கூடும்.

  உரிமம் பெறாத பணம் அனுப்பும் வணிகத்தை நடத்துவது அல்லது அப்படி நடத்தும் ஒருவருடன் ஈடுபடுவது சட்டவிரோதமானது. அவ்வாறு ஈடுபட்டதற்கு நீங்கள் பிடிபட்டால், உங்களுக்கு $100,000 அபராதம் அல்லது 2 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படும். உங்கள் வேலை அனுமதிச் சீட்டு ரத்து செய்யப்படும்.

**உதவி நாடுங்கள்**
நீங்கள் பணப் பிரச்சனைகளை எதிர்நோக்கினால், உங்கள் முதலாளியை அணுகி என்ன செய்ய முடியும் என்பது பற்றி கலந்து பேசுங்கள். நீங்கள் குடியேறி ஊழியர்கள் நிலையத்தை, (MWC) 6536 2692 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு ஆலோசனை பெறலாம்.

## உரிமம் பெறாத வட்டிக்கடைக்காரர்கள்

உரிமம் பெறாத வட்டிக்கடைக்காரர்களிடம் கடன் வாங்கவோ, வட்டிக்கடைக்காரர்களுக்காக வசூலிப்பவர்களாக அல்லது தரகர்களாகச் செயல்படவோ வேண்டாம். எந்தவொரு சலுகைக்காகவும் உங்கள் நண்பர்களுக்குக் கடன்களை வழங்க எந்தவொரு வட்டிக்கடைக்காரருக்கும் உதவ வேண்டாம். நீங்கள் அப்படி ஏதேனும் செய்தால், உங்கள் வேலை அனுமதிச் சீட்டு ரத்து செய்யப்படும். அதோடு, நீங்கள் மீண்டும் சிங்கப்பூரில் வேலை செய்ய அனுமதிக்கப்படமாட்டீர்கள்.

*உரிமம் பெறாத வட்டிக்கடைக்காரர்களை அடையாளம் காணக் கற்றுக்கொள்ளுங்கள்*

- அவர்களுக்கென ஒரு கடை இருக்காது.
- அவர்கள் உங்களுக்கு குறுஞ்செய்தி / முகநூல் வழியாக செய்தி அனுப்புவார்கள் அல்லது அவர்களிடம் கடன் வாங்கச் சொல்லி உங்கள் தொலைபேசி எண்ணை அழைப்பார்கள்.




*உரிமம் பெறாத வட்டிக்கடைக்காரர்களைப் புறக்கணித்திடுங்கள்*

- ‘இலவசப் பணம்’ அல்லது ‘வட்டி இல்லாத கடன்’ சலுகை அளிக்கப்படும் என்பதை நம்ப வேண்டாம். இத்தகைய குறுஞ்செய்திகளைப் புறக்கணித்து உடனடியாக அழித்துவிடவும்.

- அந்தச் செய்திகளுக்குப் பதிலளிக்க வேண்டாம். நீங்கள் எந்த வகையிலும் பதிலளித்தால் (உங்கள் பெயர், எண், முகவரி, வங்கிக் கணக்கு போன்றவற்றைக் கொடுத்தால்), உரிமம் பெறாத வட்டிக்கடைக்காரர்கள் நீங்கள் கடன் வாங்கியதாகக் கூறலாம்.
- அவர்கள் உங்களை மீண்டும் தொடர்பு கொண்டால், தயவுசெய்து காவல்துறையை '999' அல்லது 1800 255 0000 என்ற எண்ணில் அழைக்கவும் அல்லது உங்கள் முதலாளியிடம் சொல்லவும்.
- கடன் வாங்குவதற்காக உங்கள் நண்பர்களுக்கு உங்கள் வேலை அனுமதி சீட்டை இரவலாகக் கொடுக்க வேண்டாம்.

### தண்டனைகள்

உரிமம் பெறாத வட்டிக்கடைக்காரர்களின் வணிகத்தில் உதவினால்:
- $30,000 முதல் $300,000 வரை அபராதம்
- 4 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை
- 6 பிரம்படிகள் வரை

நீங்கள் உரிமம் பெறாத வட்டிக்கடைக்காரர்களிடம் கடன் வாங்கியதாகக் கண்டறியப்பட்டால், மனிதவள அமைச்சு உங்கள் முதலாளியிடம் தெரிவிக்கும். அதோடு, உங்கள் வேலை அனுமதிச் சீட்டு ரத்து செய்யப்படும். நீங்கள் சொந்த நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்படுவீர்கள். மீண்டும் சிங்கப்பூரில் வேலை செய்ய அனுமதிக்கப்பட மாட்டீர்கள்.

### உரிமம் பெற்ற வட்டிக்கடைக்காரர்கள்

நீங்கள் உரிமம் பெற்ற வட்டிக்கடைக்காரர்களிடம் கடன் வாங்க முடிவு செய்தால், பின்வருவனவற்றைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள்:




- அதிக வட்டி விகிதத்தின் காரணமாக நீங்கள் கடன் வாங்கிய தொகையை விட திருப்பிச் செலுத்தும் தொகை மிகக் கூடுதலாக வளரக்கூடும். எடுத்துக்காட்டாக, நீங்கள் $500 கடன் வாங்கினால், நீங்கள் $1,000 வட்டிக்கடைக்காரருக்குத் திருப்பி செலுத்த வேண்டும்.
- நீங்கள் முன்கூட்டியே நிர்வாகக் கட்டணத்தையும் தாமதமாகக் கடனைத் திருப்பிச் செலுத்தினால் தாமதக் கட்டணத்தையும் செலுத்த வேண்டியிருக்கும்.
- செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் வட்டி உங்களுக்கு தெளிவாக விளக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

### கடன் வரம்புகள்

சிங்கப்பூரில் கடன் வாங்குபவர்களைப் பாதுகாக்க சட்டங்கள் உள்ளன. கடன் வரம்பு என்பது, நீங்கள் எவ்வளவு சம்பாதிக்கிறீர்கள் என்பதன் அடிப்படையில், உரிமம் பெற்ற அனைத்து வட்டிக்கடைக்காரர்களிடம் மொத்தமாக நீங்கள் கடன் வாங்கக்கூடிய தொகையாகும்.

| நீங்கள் சம்பாதிப்பது | நீங்கள் வாங்கக்கூடிய கடன் |
|---|---|
| ஆண்டுக்கு $10,000க்கும் குறைவாக | $500 வரை |
| $10,000 மற்றும் அதற்கு மேற்பட்ட தொகை, ஆனால் ஆண்டுக்கு $20,000க்கும் குறைவாக | $3,000 வரை |

### சுய விலக்கல் திட்டம்


உங்கள் விண்ணப்பத்தை இணையத்தின் வாயிலாகச் சமர்ப்பிப்பதன் மூலம், நீங்கள் சுய விலக்கலுக்கு விண்ணப்பிக்கலாம். இதன்வழி, உரிமம் பெற்ற வட்டிக்கடைக்காரர்கள் உங்களுக்குக் கடன் கொடுக்க அனுமதிக்கப்படுவதில்லை. நீங்கள் கடன் வாங்குவதிலிருந்தும் கடனாளி ஆவதிலிருந்தும் இது உங்களைத் தடுக்கும்.

சுய விலக்கல் என்பது உங்கள் விருப்பத்தின்பேரில் செய்வதாகும். அது குறைந்தது 2 வருடங்களுக்கு நீங்கள் கடன் வாங்கக்கூடாது என்ற உறுதிப்பாடாகும்.

உங்கள் சார்பாக www.mlcb.com.sg என்ற இணையத்தளத்தில் விண்ணப்பிக்க உங்கள் முதலாளியிடம் அல்லது வேலைவாய்ப்பு நிறுவனத்திடம் நீங்கள் கோரலாம்.

### உத்தரவாதமளிப்பவராகச் செயல்படக்கூடாது

உங்கள் நண்பர் உரிமம் பெற்ற வட்டிக்கடைக்காரரிடம் கடன் வாங்கினால், உங்கள் நண்பருக்கு உத்தரவாதமளிப்பவராகச் செயல்பட உங்களுக்கு அனுமதி இல்லை.



# பயனுள்ள தொலைபேசி எண்கள்



**உங்களுக்கு எந்த நேரத்தில் உதவி தேவைப்பட்டாலும், உதவிக்குக் கீழே உள்ள எண்களை அழைக்கலாம்:**

| | |
|---|---|
| **முக்கியமான தொலைபேசி எண்கள்** | |
| **காவல்துறை** | 999 |
| **தீ / அவசர மருத்துவ வாகனச் சேவை** | 995 |
| **மனிதவள அமைச்சு** | |
| **குடியேறி ஊழியர்களின் வேலை, சம்பளம் மற்றும் நல்வாழ்வு தொடர்பான விஷயங்கள்** | 6438 5122 |
| **பணியிடப் பாதுகாப்பு மற்றும் சுகாதார மன்றம்** | |
| **பணியிடப் பாதுகாப்புத் தொடர்பான விஷயங்கள்** | 6317 1111 |
| **அரசாங்கச் சார்பற்ற அமைப்புகள்** | |
| **MWC (குடியேறி ஊழியர்கள் நிலையம்)**<br>- வேலைவாய்ப்பு தொடர்பான விஷயங்களை அறிந்து கொள்ள அல்லது உங்களுக்கு உதவி தேவைப்படும்போது | 6536 2692<br>(24-மணிநேர உதவி எண்) |
| **SOS (சிங்கப்பூர் அபய ஆலோசனை சங்கம்)**<br>- தனிப்பட்ட பிரச்சனைகள், மனச்சோர்வுக்கான ஆலோசனை போன்றவற்றுக்கான உதவி தேவைப்படும்பொழுது | 1800 2214 444<br>(24-மணிநேர உதவி எண்) |
| **ஹெல்த்செர்வ்**<br>- மருத்துவப் பராமரிப்பு, ஆலோசனை, சமூக உதவி நாடுவது ஆகியவற்றிற்கு | 3138 4443<br>(24-மணிநேர உதவி எண்) |
| **தூதரகங்கள் / உயர் ஆணையங்கள்** | |
| **பங்களாதேஷ் மக்கள் குடியரசின் தூதரகம்** | 6255 0075 |
| **சீன மக்கள் குடியரசின் தூதரகம்** | 6412 1900 |
| **இந்தியத் தூதகரம்** | 6238 2537 |
| **இந்தோனீசியக் குடியரசின் தூதரகம்** | 6737 7422 |
| **மலேசியத் தூதரகம்** | 6235 0111 |
| **மியன்மார் தூதரகம்** | 6735 1672 |
| **பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் தூதரகம்** | 6737 6988 |

| | |
|---|---|
| **பிலிப்பீன்ஸ் குடியரசின் தூதரகம்** | 6737 3977 |
| **இலங்கை ஜனநாயக சோசியலிச குடியரசின் தூதரகம்** | 6254 6773 |
| **ராயல் தாய்லாந்து தூதரகம்** | 6224 1797 |

நீங்கள் மன உளைச்சலுக்கு ஆளாகும்போது அல்லது மன அழுத்தத்தை உணரும்போது உதவியை நாடத் தயங்க வேண்டாம். நீங்கள் மனதளவில் சோர்வாக உணர்கிறீர்கள் அல்லது வீட்டில் பிரச்சினைகள் இருந்தால், யாராவது ஒருவரிடம் பேசுங்கள். யாரை நாடுவது என்று உங்களுக்குத் தெரியாவிட்டால், மேலே உள்ள தொலைபேசி எண்களை நீங்கள் அழைக்கும்போது உதவி கிடைக்கும். உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க எப்போதும் யாரோ ஒருவர் இருப்பதை நினைவில் கொள்ளுங்கள்.

**உதவிக்கு மனிதவள அமைச்சு அல்லது TADM எனப்படும் சர்ச்சை நிர்வாகத்திற்கான முத்தரப்பு கூட்டணியை நாடுங்கள்**

நீங்கள் வேலைசார்ந்த பிரச்சனைகளை எதிர்கொண்டால், 6438 5122 என்ற எண்ணை அழைத்து மனிதவள அமைச்சிடம் உதவி நாடலாம்.

உங்களுக்கு சம்பளப் பிரச்சனைகள் இருந்தால், நீங்கள் TADM-ஐ அணுகலாம். மனிதவள அமைச்சின் சேவை மையம், மாடி 3, 1500 பெண்டமியர் சாலை, சிங்கப்பூர் 339946 எனும் முகவரியில் TADM அமைந்துள்ளது.

உங்கள் சம்பளம், கோரிக்கைகள் அல்லது வழக்குகள் எதையும் தீர்த்துக் கொள்ளாமல் உங்கள் முதலாளி உங்களை வலுக்கட்டாயமாக வீட்டிற்கு அனுப்ப முயற்சித்தால், நீங்கள் விமான நிலையக் குடிநுழைவு முகப்புகளில் உள்ள அதிகாரிகளை உதவிக்கு அணுக வேண்டும். மனித வள அமைச்சு உங்களுக்கு உதவும்.

# கொவிட்-19 விவரம்

**பாதுகாப்பு இடைவெளி நடவடிக்கைகள்**
தொற்று நோய்களால் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க உங்கள் தங்குமிடங்களிலும் உங்கள் பணியிடத்திலும் பாதுகாப்பு இடைவெளி நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்கவும்.

- முகக் கவசம் அணியுங்கள்
- ஒருவருக்கொருவர் 1 மீட்டர் பாதுகாப்பு இடைவெளியைக் கடைப்பிடியுங்கள்.
- கூட்டத்தைத் தவிர்க்கவும்.

**பட்டியலிடப்பட்ட வழக்கமான சோதனை**
பட்டியலிடப்பட்ட வழக்கமான பரிசோதனையில் (ஆர்ஆர்டி) ஒவ்வொரு 14 நாட்களுக்கு ஒருமுறை ஸவாப் பரிசோதனை நடத்தப்படுகிறது. பின்வரும் காரணிகளுக்காக நீங்கள் பட்டியலிடப்பட்ட வழக்கமான பரிசோதனையில் கலந்துக்கொள்ள வேண்டும்:

- கட்டுமானம், கடல்சார்ந்த மற்றும் செயல்முறை துறைகளில் பணிபுரிபவர்கள்;
- அல்லது பிற துறைகளைச் சேர்ந்தவர்கள் என்றாலும், கட்டுமானம், கடல்சார்ந்த மற்றும் செயல்முறை பணியிடங்களில் பணிபுரிபவர்கள்;
- அல்லது தங்கும் விடுதியில் தங்கி இருந்தால்.

நீங்கள் பட்டியலிடப்பட்ட வழக்கமான பரிசோதனைக்குச் செல்ல எடுக்க வேண்டிருந்தால், உங்கள் முதலாளியுடன் சேர்ந்து செயல்பட்டு பரிசோதனைக்கான நேரத்தைக் குறிக்கலாம். உங்களின் பாதுகாப்பு மற்றும் உங்களைச் சுற்றியுள்ளவர்களின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்த, பட்டியலிடப்பட்ட வழக்கமான பரிசோதனை முக்கியமானது. நீங்கள் இந்தப் பரிசோதனையை மேற்கொள்ளாவிட்டால், உங்கள் அக்சஸ்கோட் சிவப்பு நிறமாக மாறும். மேலும், நீங்கள் வேலைக்குச் செல்ல அனுமதிக்கப்பட மாட்டீர்கள்.

**வெளியேறும் அனுமதி அட்டை (எக்ஸிட் பாஸ்)**
நீங்கள் தங்கும் விடுதியில் தங்கி இருந்தால், ஓய்வு அல்லது தனிப்பட்ட நோக்கங்களுக்காக தங்கும் விடுதியிலிருந்து வெளியேறும் அனுமதி அட்டைக்காக SGWorkPass செயலியில் (பக்கம் 20-ஐப் பார்க்கவும்) உங்கள் ஓய்வு நாளுக்கு 7 நாட்களுக்கு முன்பே விண்ணப்பிக்க வேண்டும். ட்ரேஸ்டுகெதர் செயலியையும் நீங்கள் நிறுவி இருக்க வேண்டும்.

Download on the App Store

GET IT ON Google Play

உங்கள்ளது அங்கீகரிக்கப்பட்ட வெளியேறும் அனுமதி அட்டை மூலம், ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் உங்கள் ஓய்வு நாளில் உங்கள் தங்கும் விடுதிக்காக ஒதுக்கப்பட்ட பொழுதுபோக்கு மையத்திற்கு உங்கள் முதலாளி ஏற்பாடு செய்த போக்குவரத்து மூலம் செல்லலாம்.

நீங்கள் பொழுதுபோக்கு மையத்தை அடையும்போது, சேஃப்என்ட்ரி வருகை முறையைப் பயன்படுத்தி நுழைய வேண்டும். எல்லா நேரங்களிலும் முகக் கவசம் அணியவும் மறவாதீர்கள். மற்றவர்களிடமிருந்து 1 மீட்டர் இடைவெளியைக் கடைப்பிடிக்கவும். மேலும் கூட்டமாகக் கூடாதீர்கள்.

மேலும் தகவலுக்கு, pass.gowhere.gov.sg என்ற இணையத்தளத்துக்குச் செல்லவும்.

வீடமைப்புக் கழகக் வீடுகள் அல்லது தனியார் குடியிருப்புகளில் தங்கியிருக்கும் ஊழியர்களுக்கு இது பொருந்தாது.

தொடர்புத் தடமறியும் நோக்கங்களுக்காக உங்கள் தொடர்புத் தடமறியும் டோக்கனை (அதாவது புளூபாஸ் அல்லது ட்ரேஸ்டுகெதர் டோக்கன் / கைபேசிச் செயலி) எல்லா நேரங்களிலும் அணிய வேண்டும்.

**அக்சஸ்கோட்**



SGWorkPass கைபேசிச் செயலியில் உள்ள உங்கள் அக்சஸ்கோட் உங்கள் குடியிருப்புகளை விட்டு வேலைக்குச் செல்ல நீங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளீர்களா என்பதைக் காண்பிக்கும்.

உங்கள் அக்சஸ்கோட் பச்சை நிறமாக இருந்தால் மட்டுமே நீங்கள் உங்கள் குடியிருப்புகளை விட்டு வேலைக்குச் செல்லலாம்.

உங்கள் அக்சஸ்கோட் சிவப்பு நிறமாக இருந்தால், உங்கள் குடியிருப்புகளை விட்டு வெளியேறவோ வேலைக்குச் செல்லவோ வேண்டாம்.

**முக்கியம்**

உங்கள் அக்சஸ்கோட் சிவப்பு நிறத்தில் இருந்தால் வேலைக்குச் செல்ல வேண்டாம்

| **பச்சை அக்சஸ்கோட்: குடியிருப்புகளை விட்டு வேலைக்குச் செல்லலாம்** | **சிவப்பு அக்சஸ்கோட்: குடியிருப்புகளை விட்டு வேலைக்குச் செல்ல முடியாது** |
|---|---|
|  |  |





அக்சஸ்கோட் சிவப்பாக இருக்கும்போது தங்கள் குடியிருப்புகளில் இருந்து வெளியேறியதாகக் கண்டறியப்பட்ட ஊழியர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

**FWMOMCare**

உங்கள் ஸ்வாப் பரிசோதனை முடிவுகள் மற்றும் ஸ்வாப் பரிசோதனைக்கான நேரம் போன்ற விவரங்களைச் சரிபார்க்க FWMOMCare செயலியைப் பயன்படுத்தலாம். செயலியை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்த படிப்படியான பயனர் வழிகாட்டலுக்கு https://mom.gov.sg/eservices/fwmomcare என்ற இணையப் பக்கத்தை அணுகவும்.